PUPLIC LIBRARY
JAFFNA

ISSN 1391-9504

# விஜய்

Vijey விජය්

03.10.2012 - மலர் 09, இதழ் 31

## கணினி தொகுப்பு கையேடு



## டிஸ்னிலாந்து...

## சாரணர் உலகம்

வாசகர் முகம்

விலை ரூபா 15/-

தமிழ்பேசும் பிள்ளைகளுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆதிகால வரலாறு

# 'மாருதப்புரவீகவல்லி'

01



**யாழ்ப்பாண வரலாற்றில் ஆரியர், திராவிடர் வருகை மிகவும் முக்கியமானது. 'யாழ்ப்பாணம்' என்னும் பெயர் இலங்கைத் தீவின் வடதிசையில் ஏற்படுவதற்கு முன்னர் முதலாவது பட்டத்து ராஜ குமாரியாக விளங்கியவள் 'மாருதப்புரவீகவல்லி' ஆவாள். இவள் வரலாற்றோடு முற்பிறப்பு பற்றிய தகவல்களும் சரித்திர ஆசிரியர்களால் கூறப்பட்டுள்ளது. அதன் காரணமாக, மாருதப்புரவீகவல்லியின் முற்பிறப்பு சம்பந்தமான விபரமும் இத்தொடரில் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.**

**குதிரை முக குன்ம வியாதியை நீக்குவதற்காக, தென்னிந்திய சோழ மண்டலத்திலிருந்து இலங்கைத் தீவின் வடதிசை நோக்கி வந்தவளே மாருதப்புரவீகவல்லி. இவளை ''மாருதப்பிரவல்லி'' என்றும் சில சரித்திர ஆசிரியர்கள் குறிப்பிடுகின்றனர்.**

ஆக்கம்: அரியாலையூர் சி.சிவதாசன்



இலங்கை, ஈழம், இரத்தினதுபம் என அழைக்கப்படுகின்ற இலங்கைத் தீவில் ஆதிகாலத்தில் இருவேறு இனத்தவர்கள் வாழ்ந்து வந்துள்ளார்கள். இவர்களை நாகர்கள் மற்றும் இயக்கர்கள் என சரித்திரம் கூறுகின்றது. இவ்விரு இன மக்களில் நாகர்கள் எனப்படும் இனத்தவர் அதிகமாக வடபகுதியிலும், தென்பகுதி மற்றும் மலைநாடு ஆகிய பகுதிகளில் இயக்கர்கள் எனப்படும் இனத்தவர்களும் அதிகளவில் வாழ்ந்து வந்துள்ளார்கள். நாகரிகம் அறிந்திராத இவர்கள் காடுகளிலும் மலையோரங்களிலும் நதிக் கரைகளிலும் உணவு தேடி இடம்பெயர்ந்து காலத்திற்குக் காலம் ஒவ்வோர் இடங்களாக அலைந்து திரிந்து வாழ்ந்து வந்தார்கள். இவர்களின் முக்கிய தொழில் மிருகங்களையும் பறவைகளையும் வேட்டையாடுவதாகவே அமைந்திருந்தது. ஆனால், வடபகுதியில் வாழ்ந்த நாகர்கள் ஓரளவு நாகரிகம் மிக்கவர்களாக குடில்கள், அழகிய வீடுகள் அமைத்துக் குடும்பம், குடும்பமாக வாழ்ந்து வந்தார்கள். இவர்கள் வாழ்ந்த இடம் 'நாகதீபம்' என அழைக்கப்பட்டது. இந்த நாகதீபமானது யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய பிரதேசங்களை உள்ளடக்கியிருந்தது. இவை கடல்களால் பிரிக்கப்பட்டு தனித்தனியே இருந்தன. ஒரு பிரதேசத்திலிருந்து இன்னொரு பிரதேசத்திற்குச் செல்வதாயின் கட்டுமரம், தோணி ஆகியவற்றின் உதவியோடு கடலில் பிரயாணம் செய்தே செல்லவேண்டிய நிலை காணப்பட்டது. கடல் வற்றும் காலங்களில் சில இடங்களில் மட்டும் நடந்துசெல்லக் கூடிய வாய்ப்புகள் இருந்தன. இயக்கர்கள் வாழ்ந்த இடங்கள் தாமரபரணி, திரிகூடம், அரித்தகிரி, யக்குரகல, வக்கல, நிகும்பிலாவனம், துமரக்க, விந்தனை, மகியங்கனை, சிராவஸ்து ஆகியன ஆகும். இவர்கள் வடபகுதியின் வன்னிப் பிராந்தியமான இயக்கச்சியிலும் இடம்பெயர்ந்து வாழ்ந்துள்ளார்கள். நாகர்கள் தாம் வாழ்ந்த இடங்களான நாகதீவு (நயினாதீவு), கதிரமலை, வல்லிபுரம், நாகர்கோவில், சம்புத்துறை, கரியாலை, நாகபடுவான், குருந்தன் குளம், மாந்தை, திருக்கேதீஸ்வரம், கந்தரோடை, மகாவில்லாச்சி ஆகிய பகுதிகளில் நெற்செய்கை, கைமாற்று அல்லது பண்டமாற்று (பொருளுக்குப் பொருள் கொடுத்தல்) ஆகிய தொழில்களையும் மேற்கொண்டு வந்தார்கள். இவர்கள் நாகவழிபாட்டையும், லிங்க வழிபாட்டையும், சூரிய, சந்திர வணக்கங்களையும் கொண்டிருந்தார்கள்.

இயக்கர் இனத்தினர் காடுகள், மலைப்பகுதிகள், கடலோரம் என அலைந்து வேட்டையாடியும், மாமிச வகைகளை கடல், ஆறுகளில் பிடித்தும் தமது உணவுத் தேவைகளைப் பூர்த்திசெய்து வந்தார்கள். துஷ்ட தேவதைகளை, பேய் பிசாசுகளை இவர்கள் வணங்கி வந்ததோடு, மாய மந்திரசக்திகளில் கைதேர்ந்தவர்களாகவும் இருந்து வந்தார்கள். இத்தகைய காலகட்டத்தில் இலங்கையின் தென்பகுதியில் புத்த மதம் பரவி இருக்கவில்லை. இருந்தபோதும் மாதவியின் வழிபிறந்த மணிமேகலையின் வழியாக இம்மதமானது நாகதீவில் பரவி இருந்தது. புத்த பிரானின் கொள்கைகளினால் அங்கு வாழ்ந்த நாகர்கள் பெரிதும் கவரப் பட்டார்கள். கந்தரோடை, சம்புக்கோணம், நாகர்கோவில் ஆகிய இடங்களிலும் இம்மதம் பரவி இருந்தது. காலஞ்செல்லச் செல்ல இம்மதம் இங்கு அருகி இல்லாது அழிந்து போனது.

> மாருதப்புர வீகவல்லி தென்னிந்திய சோழச்சிற்றரசினைச் சேர்ந்தவள். இவள் திராவிடர் என்னும் தமிழர் பரம்பரையினள்

நாகர்கள், இயக்கர்கள் ஆதிதிராவிட இனத்தைச் சார்ந்தவர்களென சரித்திர, தொல்பொருள் ஆய்வாளர்கள் கூறியுள்ளார்கள். இவர்களின் பேச்சுமொழி எது என்பது கேள்விக்குறியாகவே உள்ளது. இதுபற்றிய மேலதிக விபரங்கள் இதுவரை கிடைக்கவில்லை. மாருதப்புரவீகவல்லியின் வரலாற்றுக் காலம் கிறிஸ்து பிறந்ததன் பின்னரான காலப்பகுதியாகும். மாருதப்புரவீகவல்லி தென்னிந்திய சோழச்சிற்றரசினைச் சேர்ந்தவள். இவள் திராவிடர் என்னும் தமிழர் பரம்பரையினள். இவளின் வரலாற்றுடன், வட இந்தியாவின் கலப்பின ஆரியர் வருகை பின்னிப் பிணைந்து யாழ்ப்பாண வரலாற்றில் காணப்படுவதால், ஆதி இலங்கையில் வாழ்ந்தவர்கள் புலம்பெயர்ந்து வந்தவர்கள் பற்றியும் இங்கு குறிப்பிடுவது அவசியமாகின்றது. மாருதப்புரவீகவல்லியின் வரலாற்றில் அவளின் முற்பிறப்புப் பற்றியும் அறியக்கூடியதாக உள்ளது.

(தொடரும்)

# மெத்தைகள் எவ்வாறு தயாராகின்றன?






மெத்தைக்கான Rubber Foam எனப்படும் பஞ்சு நுரை மெத்தையானது, செயற்கை றப்பரில் இருந்து தயாரிக்கப்படுகின்றது. அதாவது, திரவ வடிவில் உள்ள றப்பரில் காற்றைச் செலுத்தி ஸ்பொன்ச் றப்பர் உருவாக்கப்படுகின்றது. இதனையே சோஃபா மற்றும் வாகனங்களின் உள்ள குஷன் கதிரைகளுக்குப் பயன்படுத்துகின்றனர். அதேபோன்று, ரசாயனத்துடன் வாயுவை ஏற்றி, குமிழ்களை உருவாக்கி பலவகையான ஸ்பொன்ச்கள் தயாரிக்கப்படுகின்றன. மேலும், கந்தகம் கலந்து வெப்பமாக்கப்பட்டு Foam உருவாக்கப்படுகின்றது. அதன் போது, உறுதியான எலாஸ்டிக் தன்மையுடையதாக ஸ்பொன்ச் றப்பர் உருவாகின்றது. இதனைக் கொண்டே, பலவித வடிவங்களில் மெத்தையாகத் தயாரிக்கின்றனர். இவற்றில் இலகுவில் தீப்பிடிக்கக்கூடிய வகையில் ரசாயனத்தைச் சேர்த்து தயாரிக்கும் Foam மெத்தைகள் ஆபத்தானவை. தேங்காய் நாரில் உருவாக்கப்படும் மெத்தைகளே, உடலுக்கும் சுற்றுப்புறச் சூழலுக்கும் சிறந்தவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


விஜய் Vijey
விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு - 02
தொலைபேசி: 2479653,
மின்னஞ்சல்: Vijey @ Wijeya.lk


# கனவுலகை நிஜமாகக் காட்டும் டிஸ்னிலாந்து

*பேசுகின்ற எலிக்குஞ்சுகள், செல்லமான முயல் குட்டிகள், ஆபத்தில்லாத கரடிகள், சாந்தமான புலிகள், துடுக்குத் தனமான யானைக் குட்டிகள், குழப்படியான மான் கூட்டம் ஆகியன வசிக்கின்ற சுவாரஸ்யமான இடம்தான் 'டிஸ்னிலாந்துப் பூங்கா' (Disneyland park) ஆகும்.*



வோல்ட் டிஸ்னி






## சிறுவர் கதை உலகம்

கார்ட்டூன் மற்றும் கற்பனை மிகு அழகான உலகினை சிறுவர்கள் கண்டுகளிப்பதற்கென உருவாக்கப்பட்ட அபூர்வமான ஓர் இடமாகிய டிஸ்னிலாந்துப் பூங்காவை உருவாக்கியவர் வோல்ட் டிஸ்னி ஆவார். ஆரம்பகாலத்தில் இவர் சிறுவர்களுக்கென கறுப்பு, வெள்ளை கார்ட்டூன் சித்திரங்களையே வரைந்து வந்தார். இந்த சித்திரங்களை மேலும் மெருகூட்டி அதனை சினிமாத் திரைப்படமாக மாற்றி- தொட ர்ந்து மனம் மறக்காத கதாபாத்திரங்களை உருவாக்கிப் படைக்கப்பட்டதே 'டிஸ்னிலாந்து' ஆகும்.

டிஸ்னிலாந்து என்பது சிறுவர்களது கனவுலகின் சுவர்க்கலோகமாகும். உலகில் இதுவரை நான்கு டிஸ்னிலாந்துகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. அமெரிக்கா, ஃபிரான்ஸ், ஜப்பான், ஹொங்கொங் ஆகிய இடங்களிலேயே அவை அமைந்துள்ளன. முற்காலத்தைச் சேர்ந்த மரவேலைப்பாட்டுக் கலைஞர்களின் படைப்புக்களான உயரமான கட்டடங்கள் உட்பட, பழங்காலத்தை நினைவூட்டக் கூடிய படைப்புக்கள் பலவும் இங்கு உள்ளன.



## டிஸ்னி ஊர்வலம்

டிஸ்னிலாந்தில் உள்ள மிகவும் விசேடமான அம்சம் 'டிஸ்னி ஊர்வலம்' ஆகும். இந்த டிஸ்னி ஊர்வலத்தை அழகுபடுத்துவதற்கு ஏராளமான களிப்பூட்டும் அம்சங்கள் இடம்பெறுகின்றன. கற்பனையில் உருவாக்கம் பெற்ற கதாபாத்திரங்கள் உள்ளடக்கப்பட்ட இந்த ஊர்வலத்தில் 35,000 இற்கு மேற்பட்ட வித்தியாசமான ஆடை அலங்காரங்களைக் கண்டுகளிக்கலாம்.

## டிஸ்னிலாந்தில் செலூன்

ஒவ்வொரு டிஸ்னிலாந்திலும் முடிதிருத்தும் நிலையம் (செலூன்) ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. டிஸ்னியின் தகப்பனார் ஒரு முடிதிருத்தும் தொழிலாளி என்பதனால், அவரின் ஞாபகார்த்தமாகவே, இவ்வாறு ஒவ்வொரு டிஸ்னிலாந்திலும் செலூன் ஸ்தாபிக்கப்பட்டது.

## இரண்டு பிரிவுகள்

டிஸ்னிலாந்தானது, இரண்டு பிரிவுகளைக் கொண்டதாகும். ஒன்று கேளிக்கைப் பூங்கா மற்றையது டிஸ்னி ஸ்ரூடியோ. நாம் கார்ட்டூன்களில் பார்க்கின்ற கதாபாத்திரங்களை இங்குள்ள நவீன தொழில்நுட்பங்களைக் கொண்ட ஸ்ரூடியோவில் கண்டுகளிக்கலாம். கார்ட்டூன் மற்றும் சிறுவர் திரைப்படங்கள் தயாரிக்கப்படுகின்ற விதத்தையும் இங்கு நேரில் சென்று பார்க்க முடியும். டிஸ்னி கார்ட்டூன் திரைப்படம் தொடக்கம் இன்றைய நவீன சினிமா வரையில் விரிவடைந்துள்ள சினிமா உலகம் தொடர்பான அனைத்தையும் தெரிந்து கொள்வதற்கும் மயிர்க்கூச்செறியும் காட்சிகளைத் தயாரிக்கும் விதத்தைக் கண்டறிவதற்கும் 3D அமைப்பு முறைகளை காண்பதற்கும் மேற்படி டிஸ்னிலாந்து சிறந்த தளமாக அமைந்துள்ளது.

## கனவுலகம்

சிறுவர்களின் கனவுலகமாக டிஸ்னிலாந்து கருதப்படுகின்ற போதிலும் 'கனவு' என்ற வார்த்தை நிஜமாவதைப் போன்ற உணர்வினை இது வழங்குகின்றது. டிஸ்னிலாந்தில் மிகவும் பிரபலமான கதாபாத்திரங்கள்தான் மிக்கி மவுஸ், மினி மவுஸ் ஆகியனவாகும். இவற்றை நிஜத்தில் காண்பது போன்ற பிரமையை டிஸ்னிலாந்தில் பெறமுடியும்.

## விசேட சேவை

அங்கவீனமானவர்களை அழைத்துச் செல்வதற்கு பிரத்தியேகமான குழுவொன்றும் இங்கு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

விசேட BASIC / SPOKEN ENGLISH - தபால் மூல ஆங்கில பாடநெறி
இலகுவாக ஆங்கிலம் கற்க சிறந்த வழிகாட்டி E.L.I யின் தபால் மூல ஆங்கில பாடநெறிகள்
அடிப்படையில் இருந்து ஆங்கிலத்தைக் கற்றுக் கொள்ள விரும்பும் அனைவருக்குமென விசேடமாக தயாரிக்கப்பட்ட BASIC / SPOKEN ENGLISH தபால் மூல பாடநெறி
அடிப்படையில் இருந்தே தமிழ் விளக்கத்துடன் கற்றுக் கொடுக்கப்படும் தமிழ் எழுத வாசிக்க தெரிந்து இருந்தால் போதுமானது.
பாடநெறியை தொடரும் உங்களுக்கு
கடிதம் எழுதும் முறை பயிற்சி புத்தகம் ஒன்றும்
அழகிய T.SHIRT ஒன்றும் இலவசமாக வழங்கப்படும்
எமது BASIC/SPOKEN / DIPLOMA IN ENGLISH சான்றிதழானது வேலை வாய்ப்பு பெற மற்றும் வெளிநாட்டு தூதரகங்களுக்கு (Embassy) களுக்கு செல்லு படியாகும் இதனால் உங்கள் வெளிநாட்டு பயணங்களுக்கும் VISA பெறவும் இது துணையாக அமையும்.
மேலதிக விபரங்களை பெற பெயர்,முகவரியை தெளிவாக 0777-220002 க்கு SmS செய்யுங்கள்
இலங்கையில் எப்பாகத்தில் இருந்தும் எம்முடன் இணைய முடியும்
THE ENGLISH LANGUAGE INSTITUTE
P.O. BOX 83, KANDY. Tel: 081-561 5 561, 0777-220002

## வாசகர் முகம்



'விஜய்' முன் அட்டையில் இந்த வாரம் இடம்பெற்றிருப்பவர்கள்: எம்.ஸீ.எம்.றீஸா- எம்.ஸீ.எம்.றிழா, ஹேனகெதர, பனாதரகம.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# விசித்திரக் குகைக்குள் தங்கச்சுவடி

தொடர்கதை

## களிமண் தேடிப் பயணம்

அமரனும் மனோகரும் நண்பர்கள். அன்று, மாலைவேளையில் அமரன், மனோகரின் வீட்டிற்கு வந்தான். மனோகர் அவனை உள்ளே அழைத்து அமரச் சொல்லி இருவரும் கதைத்துக்கொண்டிருந்தனர். அமரன், மனோகர் இருவரும் தரம் பத்தில் ஒரே வகுப்பில் படிக்கின்றனர். இருவரும் வகுப்பில் கெட்டிக்காரர்கள். சிறிது நேரத்தின் பின்னர் அமரன், "நான் முக்கியமாக இங்கு வந்த விடயத்தைக் கூற மறந்துவிட்டேன். நேற்று ஆசிரியர் எமக்கு களிமண்ணால் சில பொருட்கள் செய்துவரச் சொன்னாரே, மறந்து விட்டாயா?'' என்றான்.

சிரித்துக்கொண்டே மனோகர், "எமக்கு நான்கு நாட்கள் பாடசாலை விடுமுறை என்பதை நீ மறந்துவிட்டாயா?'' என்று கேட்டான்.

அதைக் கேட்ட அமரன், "அது எனக்கும் தெரியும். ஆனால், இன்றே களிமண் பொருட்களை செய்து வைத்தால்தான் நன்றாக காய்ந்து பாடசாலை செல்லும்போது எடுத்துச் செல்ல வசதியாக இருக்கும். இப்போதே அருகிலுள்ள காட்டில் களிமண் எடுத்துக்கொண்டு விரைவில் திரும்பலாம்'' என்றான்.

அதை ஏற்றுக்கொண்ட மனோகர் உள்ளே சென்று அம்மாவிடம் கூறிவிட்டு வந்தான். இருவரும் ஒரு பையையும் எடுத்துக்கொண்டு அந்தத் தெருவினூடாக நடந்து சென்றனர். சற்றுத்தூரம் சென்றதும் மனோகர், "அதோ பார் அமரா, விவசாயி ஒருவர் வருகிறார். அவரிடம் களிமண் எங்கே எடுக்கலாம் என்று கேட்போம்'' என்றான். அந்த மனிதர் அங்கிருந்து வேறு வழியினூடாக, கிராமத்திற்குள் போய்விட்டார்.

பின்னர் இருவரும் அந்த சிறியபாதையூடாகச் சென்றனர். அச்சிறியபாதை அவர்கள் இருவரையும் வெகு தூரம் அழைத்துச் சென்றது. ஆனால், அவர்கள், தாம் வந்துள்ள தூரத்தை அவதானிக்காது பேச்சு சுவாரஸ்யத்தில் பேசிக்கொண்டே நடந்தனர்.

ஓரிடத்தில் இன்னுமொரு சிறியபாதை பிரிந்து சென்றது. ஆனால், அந்தப் பாதையை இவர்கள் பொருட்படுத்தாது தொடர்ந்து சென்று கொண்டிருக்கும் பொழுது, மெதுமெதுவாக இருள் சூழ்ந்துகொண்டிருந்தது. எதனையும் அறியாத சிறுவர்கள் இருவரும் பேசிக்கொண்டு செல்லும்போது, வெளவால் ஒன்று இவர்களைக் கடந்து சென்றது. அப்போதுதான் இவர்கள் இருள் சூழ்ந்ததை அறிந்தனர். சுற்றும் முற்றும் பார்த்தபோது எங்கும் இருட்டாக இருந்தது.

(தொடரும்)




# திருடாதே!



அந்த ஹோட்டல் அன்று களைகட்டியிருந்தது. அவ்வூர் திருவிழா இறுதிநாள். அன்றுதான் நல்ல வியாபாரம். இருபது பேர் மட்டில் அந்த ஹோட்டலில் கடமை புரிகின்றனர். அவர்களில் பாபுவும் ஒருவன். மும்முரமான வியாபாரம் பம்பரமாகச் செயல்பட்டுக்கொண்டிருந்தான் பாபு. பில் போடுவதற்கு ஒருவர், காசாளர் ஒருவர் என அனைவருமே வேலை மும்முரத்தில் இருந்தனர்.

பாபு கவனிக்கும் மேசைக்கு நான்கு பேர் வந்தனர். கேட்ட உணவுகளைப் பரிமாறிய பின் பில்லை எடுத்துக் கொண்டு வந்தான். தொள்ளாயிரத்து ஐம்பது ரூபாய் என்று எழுதியிருந்தது. ஆயிரம் ரூபாயைக் கொடுத்து விட்டு அவர்கள் எழுந்து சென்று விட்டனர்.

பாபுவுக்கு உடனே ஒரு நப்பாசை! இரவு பகலாக மாடாக உழைத்துக் கிடைப்பது சொற்ப சம்பளமே, இந்த முதலாளிக்கு இரக்கமேயில்லை. எனவே, ஒரு முடிவுக்கு வந்தான். அந்தக் காசை இடுப்பில் செருகிக்கொண்டு வந்தவர்களைக் கவனிக்கலானான். வியாபாரம் முடிந்தது.

முதலாளியிடம் சென்ற பாபு, "ஐயா எனக்கு இரண்டுநாள் விடுமுறை வேண்டும்'' என்றான். "திருவிழா முடிந்து விட்டதுதானே! சரி சரி இரண்டு நாளில் திரும்பி விட வேண்டும்'' என்று கூறி சிறிது காசையும் கொடுத்தார் முதலாளி.

இது நடந்து மூன்று நாட்களாகி விட்டன. பாபு வேலைக்கு வரவே இல்லை. என்ன நடந்திருக்கும். ஒரு வேளை, சுகயீனமோ தெரியவில்லை முதலாளி தகவலை அறிந்துகொள்ள முடியாமல் சிந்தித்துக் கொண்டிருந்தார். ஹோட்டலில், அன்று கூட்டம் குறைவு. ஓய்வாக இருந்த முதலாளி, அன்றைய பத்திரிகையைப் புரட்டினார். ஒரு செய்தி அவரைத் திகைக்க வைத்தது.

'போலி ஆயிரம்' ரூபாய் தாளை மாற்ற முயற்சி செய்த பாபு எனும் நபர் சந்தேகத்தின்பேரில் பொலிஸாரால் கைது' என பாபுவின் படத்துடன் செய்தி வெளியிடப்பட்டிருந்தது.



ஜோகோ மாமா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்வி முகாமைத்துவம் - கல்வி முகாமைத்துவம் - கல்வி முகாமைத்துவம்



# எதிர்மறையான எண்ணம் வீழ்ச்சிக்கு வழிவகுக்கும்





**எண்ணமே பெரும்பாலும் நமது செயற்பாடாக அமைகின்றது. அந்த எண்ணம் நேர் சிந்தனையைக் கொண்டதாகவோ அல்லது எதிர்மறை சிந்தனையைக் கொண்டதாகவோ இருக்கலாம். அந்தவகையில், நேரான சிந்தனையானது, நம்மை உயர்த்தவும் எதிர்மறையான சிந்தனையானது, நம்மைத் தாழ்த்தவும் செய்கின்றது. இதனால், எப்போதும் நாம் நேரான சிந்தனையுடனேயே, செயற்பட வேண்டும்.**

மாணவர்களின் எண்ணம் எனும் போது, அது வெவ்வேறு கோணங்களில் செல்கின்றது. மாணவர்களைப் பொறுத்த வரையில், எண்ணங்களை ஒருநிலைப்படுத்தும் மனோபக்குவமோ, அதனைப் பிரித்தாராயும் அறிவோ அவர்களிடம் குறைவாகவே காணப்படுகின்றது. எண்ணம் என்பது தானாக ஏற்பட்டு, மறைந்து விடக்கூடியது என்றாலும், நம் எண்ணம்தான் நம்மை செயற்பட வைக்கின்றது. எண்ணம் மறைந்து விட்டாலும், எம்மை அறியாமல், எமது உள்ளம் அதனை நோக்காக வைத்தே செயற்பட்டுக் கொண்டிருக்கும். ஆகவே, எந்நிலையிலும் எமது எண்ணங்கள் நேர் சிந்தனை கொண்டதாகவே இருக்க வேண்டும். எதிர்மறை சிந்தனையால் எம்மை நாமே தாழ்த்திக்கொள்ளக் கூடாது.

அநேகமான மாணவர்கள் தாழ்வுமனப் பான்மை காரணமாகவே, இவ்வாறான எதிர்மறையான சிந்தனைகளை ஏற்படுத்திக் கொள்கின்றனர். பரீட்சையில் ஏற்படும் குறைவான புள்ளி, நேரம் போதாமை, முழுமையாகக் கற்க முடியாமை, போட்டித்தன்மை, வறுமை போன்ற காரணங்களே, இவ்வாறான எதிர்மறை சிந்தனைகள் வலுப்பெறக் காரணமாக அமைந்து விடுகின்றன. அத்துடன், ஒரு விடயத்தில் வெற்றிபெறவில்லை என்பதற்காக, அனைத்து விடயமும் அவ்வாறே அமையும் என்று நினைத்துவிடக்கூடாது. எம்மால் ஏற்படும் எதிர்மறை சிந்தனைகளால் கவலை, கோபம், தாழ்வுமனப் பான்மை, மன உளைச்சல், பதற்றம், சோர்வு போன்ற விளைவுகளே ஏற்படும். ஆகவே, உறுதியான நம்பிக்கையுடனும் முயற்சியுடனும் செயற்பட்டு நேர் சிந்தனைகளை வளர்த்துக்கொள்ள வேண்டும். அப்போதுதான் வாழ்க்கையை சிறப்பாக மாற்றிக்கொள்ள முடியும்.

**எம்.ஏ.எஃப்.சப்ரானா**

## விண்வெளித் தகவல்கள் - விண்வெளித் தகவல்கள் - விண்வெளித் தகவல்கள்

# 'கியூரியோசிடி' தனது இலக்கை அடைவதில் முன்னேறி வருகின்றது

செவ்வாய்க் கிரகத்தில் ஆய்வுப் பணிகளை மேற்கொள்வதற்காக, அங்கு தரையிறங்கியுள்ள கியூரியோசிடி தளவூர்தி, செவ்வாயில் தனது முக்கிய இலக்கை அடைவதற்கான முயற்சியில் பெரிதும் முன்னேற்றம் கண்டுள்ளதாக நாஸா விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

சுமார் ஏழு வாரங்களுக்கு முன்னர் க்ளெனெல்க் (Glenelg) என்ற பள்ளத்தாக்கை நோக்கி தற்போது பயணித்துக்கொண்டிருக்கின்றது.

அத்துடன், க்ளெனெல்க் பள்ளத்தைச் சென்றடையும் பாதையில் எதிர்படும் 25 செ.மீற்றர் உயரமும் 40 செ.மீற்றர் அகலமும் கொண்ட இருண்ட

செவ்வாயில் தரையிறங்கிய கியூரியோசிடி, தனது முக்கிய ஆய்வு இலக்குகளில் ஒன்றான



கியூரியோசிடி எடுத்த ஃபோபோஸின் படம்

கியூரியோசிடி க்ளெனெல்க் பள்ளத்தாக்கை நெருங்குவதைக் காட்டும் படம்

கற்பாறை ஒன்றையும் கியூரியோசிடி ஆராயவுள்ளது. இதற்கு 'Jake Martijevic' எனப் பெயரிடப்பட்டுள்ளது. கியூரியோசிடி தளவூர்த்தியானது, தனது ஆய்வு உபகரணங்களில் மூன்றை ஒன்றன் பின் ஒன்றாக முதன்முதலாகச் சோதித்துப் பார்ப்பதற்கு இப்பாறையைப் பயன்படுத்தும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த மாதம் நாஸா விஞ்ஞானிகள் கியூரியோசிடி தளவூர்த்தியின் முன்னேற்றம் குறித்து செய்தியாளர்களுக்கு விளக்கம் அளித்தனர். இதன் போது, செவ்வாயின் துணைக் கோள்களான ஃபோபோஸ் மற்றும் டீமோஸ் என்பன சூரியனைக் கடந்து சென்றபோது, கியூரியோசிடி எடுத்த படங்களும் காட்டப்பட்டன.

# டோன் விண்கலம் வெஸ்டாவிலிருந்து விடைபெற்றது





வெஸ்டா சிறுகோளின் சுற்றுப்பாதையில் சுமார் பதின்மூன்று மாதங்களாகத் தங்கியிருந்து, ஆய்வுகளை மேற்கொண்டு வந்த நாஸாவின் 'டோன்' (Dawn) விண்கலம், தனது திட்டத்தை முடித்துக்கொண்டு வெஸ்டாவிலிருந்து விடைபெற்றுச் சென்றுள்ளதாக நாஸா தெரிவித்துள்ளது.

அந்த விண்கலத்தில் இருந்து செப்டெம்பர் மாதம் 6 ஆம் திகதி கிடைக்கப்பெற்ற சமிக்ஞை உறுதிப்படுத்தியதாக நாஸா அறிவித்துள்ளது.

இந்த விண்கலம் தற்போதளவில் செவ்வாய்க்கும் வியாழனுக்கும் இடையில் உள்ள சிறுகோள் பட்டையில் அமைந்துள்ள 950 கி.மீற்றர் விட்டமுள்ள 'சிரிஸ்' (Ceres) என்ற குறுங்கோளை நோக்கிச் செல்கின்றது என்றும் 2015 ஆம் ஆண்டின் முற்பகுதியளவில் இது சிரிஸ் குறுங்கோளை அடையும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது. சிரிஸ் நோக்கிச் செல்ல முன்னர் டோன் விண்கலம் வெஸ்டாவின் வடமுனைப் படங்களை முதற் தடவையாகப் பூமிக்கு அனுப்பியிருந்தது. வெஸ்டாவில் உள்ள மலைகளையும் எரிமலை வாய்களையும் அப்படங்களினூடாகக் காணக்கூடியதாக இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவனம்... நாங்க[ள்] விஷத்தைக் கொண்டவர்கள்!!






மற்றுமொரு வகை மின்சார மீன்

*சூழலுக்கு ஏற்ப தம்மைத் தகவமைத்துக்கொண்டு எதிரிகளிடமிருந்து தப்பித்து மறைவாக வாழ்ந்தபடி இரைகளைத் தேடிக்கொள்ளும் ஆற்றலை பெரும்பாலான உயிரினங்கள் இயற்கையாகவே பெற்றிருக்கின்றன. எனினும், கொடிய விஷத்தைக்கொண்ட உயிரினங்கள் இவ்வாறு மறைந்து வாழ்வதில்லை. ஏனெனில், இவற்றின் உடலில் விஷத்தன்மை இருப்பதனால், ஏனைய விலங்குகள் இவற்றை இரையாகப் பிடிப்பதில்லை. இரையாகப் பிடித்து உண்ண முடியாத நஞ்சுகொண்ட இத்தகைய உயிரினங்கள், இயற்கையாகவே பிரகாசமான மஞ்சள் அல்லது சிவப்பு அல்லது பச்சை நிற உடலைக் கொண்டவையாகவே காணப்படுகின்றன. ஆக, விலங்குகள் உலகில் காணப்படும் விஷத்தன்மைகொண்ட சில உயிரினங்களைப் பற்றிப் பார்ப்போம்.*

## விஷம் மற்றும் கொடிய விஷம் உள்ள உயிரினங்கள்

விஷம்கொண்ட உயிரினங்கள் (Poisonous) என்றும் கொடிய விஷம் கொண்ட உயிரினங்கள் (Venomous) என்றும் இரண்டு வகைகள் உள்ளன. இவற்றில் பாம்புகள் மற்றும் தேள்கள் போன்றவை தற்காப்புக்காகவே விஷத்தைக் கக்குகின்றன. தமது எதிரிகளைத் தீண்டியே அவை விஷத்தை வெளியேற்றுகின்றன. விஷம் கொண்ட உயிரினங்கள் தீண்டுவதனூடாகவும் பிறவிலங்குகள் அவற்றை உணவாகக்கொள்வதனூடாகவுமே, ஏனைய விலங்குகளுக்கு விஷம் கடத்தப்படுகின்றது.

விஷத்தன்மை மிக்க உடலமைப்பினைக்கொண்ட சில உயிரினங்களின் உடலில் இருந்து சுரக்கும் விஷமானது, அவற்றை இரையாக்கிக் கொள்ள வரும் உயிரினங்களின் உடலில் படும்போது, அவற்றுக்கு கடும் எரிச்சல் உணர்வு ஏற்படுகின்றது. இதனால், அச்சமடையும் உயிரினங்கள், விஷம்கொண்ட உயிரினங்களை விட்டு விலகி ஓடிவிடுகின்றன. இவ்வாறு தப்பியோடும் விலங்குகள் பின்னர் இந்த உயிரினங்களை உட்கொள்ள முயற்சிப்பதில்லை. உடலில் உள்ள விசேட சுரப்பிகளை சுரக்கச் செய்வதனூடாகவே, இவ்வாறு விஷம் சுரக்கப்படுகின்றது.

இவ்வாறே, ஐரோப்பாவைச் சேர்ந்த ஒரு தவளை இனம் எதிரிகளிடமிருந்து தப்பிச் செல்வதற்காக, தனது செவிகளின் அருகில் இருக்கும் ஒரு சுரப்பியினூடாக விஷத்தை வெளியேற்றுகின்றது. கொம்பின் நுனியில் விஷத்தைக்கொண்ட சில வகை சிலந்திகளும் பாம்புகளும் ஏனைய உயிரினங்களைத் தீண்டுவதனூடாக தமக்குத் தேவையான இரையை செயல் இழக்கச் செய்யவும் அவை பயன்படுகின்றன.

கொடிய விஷத்தினைக் இரையைப் பிடித்துக்கொள்கின்றன. தென் அமெரிக்காவின் அமேசன் காடுகளில் உள்ள Amazonian Caterpillar எனும் கம்பளிப்பூச்சிக்கு அதன் உடலில் விஷம்கொண்ட மயிர்கள் உள்ளன.




## விஷம் மற்றும் மின்சாரத்தை வெளிப்படுத்தும் மீன்கள்

ஒன்றுக்கொன்று மாறுபடும் தன்மையில் உடல் முழுவதும் விஷத்தைக்கொண்ட 50 இற்கும் மேற்பட்ட மீன் இனங்கள் கடலில் உள்ளன. சில மீன்களுக்கு விஷம் கொண்ட முட்கள் அல்லது கொம்புகள் உள்ளன. எதிரிகளிடம் இருந்து தம்மைத் தற்காத்துக் கொள்ளவே இந்த அமைப்புக்கள் அவற்றுக்கு உதவுகின்றன. தவிர, உணவாக உட்கொள்ளப் பிடிக்கப்படும் கொண்ட முட்களை உடைய மீன்களுக்கு 'வீவர்' மீன்கள் சிறந்த உதாரணமாகும். அவுஸ்திரேலியாவின் கற்பாறை மீன்களும் இவ்வாறான தன்மை வாய்ந்தவையே. இத்தகைய மீன்களை உணவாக உட்கொள்ளும் உயிரினங்கள் பெரும்பாலும் மரணத்தைத் தழுவ நேரிடுகின்றன. இவை தவிர, ஏனைய விஷ மீன்களிடம் விஷத்தினை சுரக்கும் சுரப்பிகளைக் கொண்ட முட்கள் உள்ளன.

## ∴பைலோபெட்டிஸ் டெரிபிளிஸ் தவளை

மத்திய அமெரிக்க சுதேசிய மக்கள் இந்தத் தவளையின் விஷத்தைப் பயன்படுத்தி வேட்டையாடினர் என்று கூறப்படுகின்றது. தற்போது இந்த விஷத்தைப் பயன்படுத்தி நோய் எதிர்ப்புச்சக்தி மருந்தொன்றும் தயாரிக்கப்படுகின்றது.





## ∴பென்டஸ்மல் விஷம்கொண்ட மரத்தவளை



ஈக்வடோரிலுள்ள இந்த சிறிய மரத்தவளையின் தோலில் இருந்து பெறப்படும் விஷம் கொண்ட ரசாயனப் பதார்த்தத்தினால் சிறந்த வலி நிவாரணி மருந்து தயாரிக்கப்படுகின்றது.

## டர்சியோபெலோ விரியன்



மத்திய அமெரிக்காவில் காணக்கூடிய இந்தப் பாம்பின் விஷத்தைப் பயன்படுத்திப் பெறப்படும் ரசாயனப் பதார்த்தத்தினூடாக, பக்ற்றீரியாத் தொற்றைக் கட்டுப்படுத்தக்கூடிய ஒருவகை மருந்து தயாரிக்கப்படுகின்றது.

## கோன் நத்தை



ஈரவலய நீர்நிலைகளில் வசிக்கும் இவற்றுக்கு விஷம்கொண்ட கொம்புகள் உள்ளதுடன், அந்த விஷத்தைப் பயன்படுத்தித் தயாரிக்கப்படும் மருந்தானது, மறதி நோய் மற்றும் மனப்பிறழ்வு நோய் என்பனவற்றுக்கு சிகிச்சை அளிக்கப் பயன்படுத்தப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# iPhone இன் ஆறாவது தலைமுறை: iPhone 5




உலகமே எதிர்பார்க்கின்ற வகையில் தனது தொழில்நுட்ப சாதனங்களை உருவாக்கி-வெளியிட்டு-ஆச்சரியம் தரும் கலையில் அப்பிள் நிறுவனத்திற்கு நிகர் அப்பிள் நிறுவனம் மட்டுந்தான்.

அண்மையில் அப்பிள் நிறுவனத்தின் மிகப் பிரபல்யமான கையடக்கத் தொலைபேசியான iPhone இன் புதிய பதிப்பாக- அதன் ஆறாவது தலைமுறைச் சாதனமாக 'iPhone 5' வெளியிடப்பட்டுள்ளது.

புதிய iPhone 5 ஆனது, அதன் முந்திய பதிப்பான iPhone 4s ஐ விட எடையில் குறைவானதாகவும் மெல்லியதாகவும் காணப்படுவதோடு, 4 அங்குலம் விசாலமான திரையையும் தன்னகம் கொண்டுள்ளது. குறிப்பாக, இதன் தற்போதைய எடை 112 கிராம் ஆகும். அதேவேளை 7.6 மில்லிமீற்றர் தடிப்புடையதாகவும் காணப்படுகின்றது.

இதேவேளை, iPhone 4s இன் பின்புறத்தில் காணப்பட்ட கண்ணாடியாலான உறை, புதிய iPhone 5 இல் அலுமினியத்தினால் பிரதியீடு செய்யப்பட்டுள்ளது. அத்தோடு, இது அப்பிளின் முன்னேற்றகரமான iOS 6 பணிசெயல்முறையைக்கொண்டு (Operating System) இயங்கவுள்ளது.

iPhone 4s இனைவிட, செயற்பாட்டில் இரண்டு மடங்கு வேகமாகவும் துரிதமாகவும் இயங்கும் தன்மையை புதிய iPhone 5 தன்னகம் கொண்டுள்ளது. கறுப்பு மற்றும் வெள்ளை நிறங்களில் இது விற்பனைக்கு வரவுள்ளதோடு, 16GB, 32GB மற்றும் 64GB ஆகிய கொள்ளளவுகளில் கிடைக்கக்கூடியதாகவும் அப்பிள் நிறுவனத்தினால் உருவாக்கப்பட்டுள்ளது.

iPhone 5 ஆனது, அதிவேகமான இணைய இணைப்புச் சாத்தியங்களை புதிய 4G வலையமைப்பு நுட்பத்தில் பெற்றுக்கொள்ளும் தகவைக் கொண்டுள்ளது. iPhone 5 இல் உள்ள பற்றரி சுமார் 225 மணித்தியாலங்கள் இயல்பான இயக்கத்தில் (Standby) இருக்கும் திறனையும் கொண்டுள்ளது. ஒலியைக் கேட்கக்கூடிய சாதனமான headset கூட, iPhone 5 இல், முற்று முழுவதுமாக மாற்றப்பட்டுள்ளது.

இதற்கு அப்பிள் நிறுவனம் 'Earpod' என பெயரையும் வைத்துள்ளது. இந்த Earpod இன் மூலமாக ஒலியை மிகத் துல்லியமாகக் கேட்கலாம். அத்துடன், iPhone 5 இல் எடுக்கப்படும் நிழற்படங்கள் உயர் தெளிவும் துல்லியமும் நிறைந்ததாகக் காணப்படுகின்றன. ஆக, அழகிய நிழற்படங்களின் அணிவகுப்புக்கு ஆதாரமாக iPhone 5 திகழும் என எதிர்வு கூறலாம்.

எவ்வாறாயினும், கடந்த செப்டெம்பர் மாதம் 15ஆம் திகதி, iPhone 5 ஐ வாங்கிக்கொள்ள முன்பதிவு செய்யலாம் என அப்பிள் நிறுவனம் அறிவித்தபோது, 24 மணிநேரத்திற்குள் 2 மில்லியன் பேர் iPhone 5 ஐ வாங்குவதற்கு, தங்களைப் பதிவு செய்துகொண்டனர்.

'மாற்றி யோசி' என்பதைத் தாரக மந்திரமாகக் கொண்ட அப்பிள் நிறுவனத்தின் சாதனங்களின் தோற்ற வடிவமைப்பு, எளிய நிலை கட்டுமானங்கள் என்பன பயனர்களை அதன் பக்கம் ஈர்த்துவிடுகின்றது என்பதே இதற்குக் காரணமாகும்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பார்வைப் புலனற்றவர்கள் தங்கள் அன்றாட வேலைகளைச் செய்யும்பொருட்டு வெள்ளைப் பிரம்பை உபயோகிப்பது

# விழிவளையல்

வழக்கம். எனினும், தற்போது MIT இன் பொறியியலாளர்களின் எண்ணக்கருவில் பார்வைப் புலனற்றவர்களுக்கு ஆதரவு அளிக்கும் வகையிலான உபகரணமொன்று உருவாக்கம் பெற்றுள்ளது. இது 'விழிவளையல்' (EyeRing) என்று அழைக்கப்படுகின்றது. புரட்சிகரமான இந்த விழிவளையலை, கைவிரலில் அணிந்து கொள்வதனூடாக, பார்வைப் புலனற்றவர்கள் தங்கள் சூழல் பற்றிய விடயங்களை மிக துல்லியமாக அறிந்து கொள்வதற்கான வாய்ப்பு உண்டாகும் என எதிர்வு கூறப்படுகின்றது.

# உலகின் மிகவும் சக்திவாய்ந்த கெமரா



உலகின் மிகவும் சக்திவாய்ந்த கெமராவானது, தனது முதலாவது நிழற்படத்தை அண்மையில் எடுத்தது. சிலி நாட்டின் மலைஉச்சியில் நிர்மாணிக்கப்பட்டுள்ள இந்தக் கெமரா, 'Dark Energy Camera' என்ற பெயரில் அழைக்கப்படுகிறது. 570 மெகா பிக்ஸல் அளவுடைய நிழற்படங்களை எடுக்கின்ற தகைமையை இது கொண்டுள்ளது. அத்தோடு, இந்தக் கெமராவை திட்டமிட்டுத் தயாரித்து முடிக்க 8 வருடங்கள் ஆனதோடு, 23 நாடுகளைச் சேர்ந்த 120 விஞ்ஞானிகளின் ஆராய்ச்சியின் விளைவாகவே, இந்தக் கெமரா தோற்றம் பெற்றது.

இந்தக் கெமராவானது, உலகின் சக்திவாய்ந்த கெமராவாக தொடர்ச்சியாக இருப்பதற்கு வாய்ப்பில்லை. ஏனெனில், கடந்த ஆண்டு அமெரிக்க அரசாங்கம், 3.2 ஜிகா பிக்ஸல் அளவுடைய நிழற்படங்களை எடுக்கக்கூடிய கெமராவை உருவாக்கும் செயற்றிட்டத்தை ஆரம்பித்துள்ளது. இது 'LSST Project' என அழைக்கப்படுகிறது.



# எங்கே செல்ல வேண்டும்?

# சப்பாத்து அழைத்துச் செல்லும்...



லண்டனைச் சேர்ந்த வடிவமைப்பாளரான டொமினிக் வில்கொக்ஸ், 'GPS' எனப்படும் பூகோள அமைவிட முறைமையைக்கொண்ட வகையில் இடத்தை அறிந்துகொள்ளக்கூடிய சப்பாத்தொன்றை வடிவமைத்துள்ளார். நீங்கள் எங்கிருந்தாலும், உங்களின் இல்லத்திற்கே உங்களை அழைத்துச் செல்லும் சாத்தியத்தை இந்த சப்பாத்துக் கொண்டுள்ளது. இரண்டு கால்களிலும் அணியப்பட்ட சப்பாத்துக்களின் குதிகளை ஒன்றோடொன்று தட்டிக்கொள்ளும் போது GPS செயற்பாட்டிற்கு வரும். வலது காலில் காணப்படும் LED மின்குமிழ்கள் தூரத்தையும் இடது காலில் காணப்படும் LED மின்குமிழ்கள் எந்தத் திசையில் பயணிக்க வேண்டுமென்பதையும் காட்டும். இந்த மாதிரியான சப்பாத்தை, Global Footprint நிறுவனம் தயாரிக்க முன்வந்துள்ளதோடு, இது கடந்த செப்டெம்பர் 26 ஆம் திகதி வரை லண்டனில் கண்காட்சிக்காக வைக்கப்பட்டது.

**உங்களுக்குத் தெரியுமா?**

'GPS' என்பதன் விரிவாக்கம்: Global Positioning System என்பதாகும்.

# வரைபடத்தில் தோற்றுப்போன அப்பிள்

அப்பிள் நிறுவனத்தின் கையடக்க சாதனங்களின் பணி செயல் முறைமையாகக் காணப்படுவதே 'iOS' எனப்படுகின்றது. இந்தப் பணி செயல்முறைமையைக் கொண்டியங்கும் சாதனங்களில் iOS 5 வரையான பதிப்பு வரையிலும் வரைபடங்களுக்கான (maps) இயல்பிருப்பு செய்நிரலியாக (default app), கூகிளின் 'Google Maps' காணப்பட்டது.

அண்மையில் வெளியான iOS 6 இல் அப்பிள் தங்களால் உருவாக்கப்பட்ட வரைபட செய்நிரலியை அறிமுகப்படுத்தியது. ஆனால், இவ்வாறு புதிதாக அறிமுகப்படுத்திய வரைபட செய்நிரலியில் காணப்படும் வரைபடங்கள் பிழையான இடங்களையும் நிலைகளையும் காட்டுவதாக உலகளாவிலுள்ள iPhone பாவனையாளர்களால் விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை, இதனைக் கேலி செய்யும் வகையில், கூகிளின் நிறுவனமான motorola தனது புதிய திறன்பேசி (Smart Phone) விளம்பரத்தை உருவாக்கி வெளியிட்டுப் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடங்களை எவ்வாறு நினைவில் நிறுத்தலாம்?

*எமது கல்வியை நாம் கற்பதற்கு பல்வேறு படிமுறைகள் உள்ளன. அந்தவகையில், எமது கல்வியை நாம் எவ்வாறு நன்கு கற்றுக்கொள்வது? பாடசாலையில் மேலதிக வகுப்புகளில் நாம் கற்றுக்கொள்ளும் விடயங்களை எப்படி நினைவில் கொள்வது? விருப்பமின்றிய பாடங்களை எவ்வாறு விருப்பமான பாடமாக்கிக் கொள்வது? இவ்வாறான விடயங்கள் மிக முக்கியமானவை. இவை பற்றிய விபரங்களையே நீங்கள் அறியப் போகிறீர்கள்.*



பாடசாலைக்கு செல்லும் உங்களது பிரதான பொறுப்பு அல்லது நோக்கு நன்கு கல்வி கற்றலாகும். இதனூடாக, நீங்கள் நன்கு பரீட்சையில் சித்திபெறவும் நல்லொழுக்கங்களைக் கற்கவும் முடியும். அதேபோன்று, உயர்தர தொழில் ஒன்றைப் பெற்றுக்கொள்ளவும் சந்தோஷமான ஆரோக்கியமான வாழ்க்கையினை வாழவும் முடியும்.

வருடந்தோறும் நீங்கள் கற்கும் விடயங்களை எவ்வாறு உள்வாங்கியிருக்கின்றீர்கள் என்பதற்கான சிறந்த உரைகல்லாக, பரீட்சைகளைக் குறிப்பிட முடியும். அவற்றுக்கு விடையளிப்பதனூடாகவே, நீங்கள் உங்கள் திறமைகளை வெளிப்படுத்த முடியும். இதற்கு நீங்கள் சிறந்த நினைவாற்றலைக் கொண்டவராக இருக்கவேண்டும். அத்துடன், புத்திசாதூரியமும் இருக்க வேண்டும்.

நீங்கள் பாடங்களைப் படிக்கத் தெரிவு செய்யும் இடம் அமைதியானதாகவும் இடையூறுகள் அற்றதாகவும் இருக்கவேண்டும். மாறாக, அமைதியற்ற சூழ்நிலையானது, உங்களது கவனத்தினை சிதறடித்துவிடும். அது மட்டுமன்றி; நீங்கள் படிப்பதற்கு தனியே மேசை ஒன்றும் கதிரை ஒன்றும் இருப்பது அவசியமாகும். இதுவே மிகச் சிறந்த ஒழுங்கு முறையுமாகும்.

## மூளைக்கு சற்று ஓய்வு கொடுங்கள்

உங்களால் 45 முதல் 50 நிமிடங்கள் வரை படிக்கப்படும் விடயங்களே, உங்கள் மூளையில் இலகுவில் பதிகின்றன. ஒரே நிலையில் இருந்து மனதை ஒருமுகப்படுத்திப் படிப்பவற்றை மனதில் இருத்திக்கொள்ள இந்தக் கால அவகாசம் மட்டுமே பயன்தரும் என்று இன்றைய மருத்துவ ஆராய்ச்சி களினூடாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. நீங்கள் ஒரு பாடத்தினைப் படித்துவிட்டு சற்று ஓய்வெடுப்பது சிறப்பானது.
இந்த ஓய்வு 5 முதல் 10 நிமிடங்களாக இருத்தல் போதுமானதாகும். உங்களுக்கு விருப்பமான விடயத்தினை இந்த ஓய்வு நேரத்தில் மேற்கொள்ளுங்கள். விரும்பிய இசையினை அல்லது பாடலைக் கேளுங்கள். இல்லாவிடின், உங்களுக்குப் பிடித்தமான நூல் ஒன்றை வாசியுங்கள். அல்லது வீட்டில் உள்ளவர்களுடன் பேசுங்கள். பின்னர் மீண்டும் பாடங்களைப் படியுங்கள். இவ்வாறு செய்வதனூடாக, நீங்கள் படிப்பவற்றை நன்கு மனதில் பதிய வைத்துக் கொள்ள முடியும்.



## தேவையானவற்றை சேகரித்து வைத்துக்கொள்ளுங்கள்



தேவையான புத்தகங்களை மட்டும் எடுத்துக்கொண்டு படிப்பதற்கு அமர்வதைத் தவிருங்கள். சிலநேரம் வேறு நிறத்திலான பேனாக்கள், அடிமட்டங்கள் என்பன உங்களுக்குத் தேவைப்படக்கூடும். அப்பொழுது நீங்கள் அடிக்கடி அவற்றை எடுப்பதற்கு எழுந்து போகும் சந்தர்ப்பங்கள் உள்ளன. இதனால், கற்றலில் மீதுள்ள உங்களது கவனம் சிதறடிக்கப்படுகின்றது.

## குறிக்கோளுடன் பாடங்களைப் படியுங்கள்



பாடங்களைப் படிக்கும்போது, குறிக்கோள் என்பது முக்கியமானது. குறிப்பிட்ட பகுதியை நான் நன்கு படித்து மனத்தில் இருத்திக்கொள்வேன் என்று நினைத்துக்கொண்டு படியுங்கள். அத்துடன், படிப்பதற்கென ஒரு நேர அட்டவணையினைத் தயாரித்துக்கொள்ளுங்கள். அந்த நேர அட்டவணைக்கு ஏற்ப பாடங்களைப் படியுங்கள்.

## வெளிப்புற தேடுதல்களும் அவசியம்


பாடங்களைப் படிக்கும்போது, குறித்த பாடங்கள் உங்கள் மனதில் நன்கு பதிய வேண்டுமாயின், அப்பாடங்கள் தொடர்பிலான மேலதிக தேடுதல்கள் இருக்கவேண்டியது அவசியமாகும். குறிப்பாக, அப்பாடம் சம்பந்தப்பட்ட மேலதிக குறிப்புகளையும், அட்டவணைகளையும் பாடக் குறிப்புகளையும் பயன்படுத்திக்கொள்ளுங்கள். அப்பொழுது அந்தப் பாடம் மனதில் நன்கு பதிந்துவிடுகின்றது.

(அ)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தளிர் கரம்

வழங்குபவர்: ஆசிரியை றோஸ்மலர்



இங்கு காணப்படும் மரத்தின் படிமுறையை வெட்டி, அட்டையொன்றில் வரிசைக்கிரமமாக ஒட்டுக.



ஒரே மாதிரியான உருக்களுடன் இணைக்க.





எண்களை இணைத்து உருவைக் காண்க.



பொம்மையின் சட்டைக்கு நிறந்தீட்டுக.


(பெரிய பூக்களை சிவப்பு நிறத்திலும் சிறிய பூக்களை பச்சை நிறத்திலும் தீட்டுக)







கோழி ஒன்றை எவ்வாறு வரையலாம்?






# பிள்ளைகளும் ஊடகத் தகவல் அறிவும்

இன்று ஊடகங்களின் ஆதிக்கத்தினால் பிள்ளைகளைப் பொறுத்தவரையில் 'மிரட்டுவது மீடியா' என்ற பதவிளக்கம் அதீத கவனத்தைப் பெறுவதாக அமைகின்றது. ஊடகங்கள் பிள்ளைகளை திட்டமிடல்கள் ஊடாக, முன்னெடுக்கப்படுகின்றன என்ற கருத்தியலும் முன்வைக்கப்படுகின்றது. இத்தகைய பின்னணியை அடிப்படையாகக்கொண்டு பிள்ளை மையப்படுத்தியதான தகவல் அறிக்கையிடல்களை, தகவல் பரிமாற்றங்களை முதன்மைப்படுத்தி உள்ளன என்று ஊடக ஆய்வுகள் சுட்டிக் காட்டுகின்றன. பிள்ளை என்பவர் யார்? இவர்களின் உள்ளங்கள் எவ்வாறு இயங்குகின்றன? அவர்களின் இயல்புகள் எவை? இவர்கள் உள்ளங்களின் நடத்தை எவ்வாறு இருக்கின்றது? பிள்ளைகள் ஊடகங்களை எவ்வாறு பயன்படுத்த முனைகின்றனர்? எவ்வாறு அவர்கள் ஊடகங்களை விரும்புகின்றனர்? போன்ற ஏழு வினாக்களுக்கான அனுபவங்களைக் கொண்டதாக, ஊடக நிறுவனங்களின் கொள்கையாக்கம் மற்றும் உள்ளடக்கங்கள் வடிவமைக்கப்பட்டு முறையான களுக்கான ஊடகத் தகவல் அறிவு பற்றிய சிந்தனையை அணுக முடியும்.



பொதுவாக, பிள்ளைகள் என்பவர்கள் சட்டப்படி 18 வயதுக்கு உட்பட்டவர்கள் என்றும் சமூகரீதியில் பாலவயதினர் எனவும் பெற்றோரின் அல்லது பாதுகாவலரின் வழிகாட்டலின்கீழ் வாழ்பவர்களாக இருப்பவர்கள் எனவும் குறிப்பிடப்படுகிறது. ஒரு காலத்தில் 'வளர்ந்த மனிதனின் சிறிய உருவமே பிள்ளை' என்று கருதினர். நவீன உளவியலின் தந்தை சிக்மன் பிராய்ட் என்பவர், ''பிள்ளை என்பது பிள்ளையே தவிர, வளர்ந்த மனிதனின் சிறிய உருவமல்ல'' என்ற புதிய கருத்தியலை முன்வைத்தார். பிஜாஜே என்ற உளவியலாளர் ஒவ்வொரு பருவத்திலும் பிள்ளையின் உளவிருத்தியானது, ஓர் ஒழுங்குமுறைப்படி நடைபெறுவதாக சுட்டிக்காட்டுகின்றார். இதில் சூழலின் தாக்கம் கணிசமான பங்கைப் பெறுவதாக குறிப்பிடுகின்றார். பிள்ளையின் மொழிநிலைகள், பழக்க வழக்கங்கள், எண்ணங்கள், செயற்படும் நடத்தைப் பாங்குகள், எண்ணாக்கங்கள் போன்ற இயல்பு நிலைகளை உருவாக்குவனவாக ஊடகங்கள் அமைகின்றன.





(தொடரும்)

**பரராஜசிங்கம் இராஜேஸ்வரன்,**
ஆசிரியர்- தொடர்பாடல் ஊடகக்கல்வி,
யா/கொக்குவில் இந்துக் கல்லூரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரப்பந்து பற்றி அறிந்துகொள்வோம்



**1895** ஆம் ஆண்டு வில்லியம் ஜீ மோர்கன் என்பவரினால் கரப்பந்தாட்டம் அமெரிக்காவில் முதன்முதலாக அறிமுகப் படுத்தப்பட்டது. இவ்விளையாட்டு ஆரம்பத்தில் 'மின்றொனெட்' என்ற பெயரில் அழைக்கப் பட்டது. அதன் பின்னர் 1896 இல் இதனைப் பார்வையிட்ட கலாநிதி அல்பிரட் ஹீல்ஸ்டட் என்பவர் இவ்விளையாட்டிற்கு 'கரப்பந்து (Volleyball) எனப் பெயரிட்டார்.

மேலும், இவ்விளையாட்டு 1916 ஆம் ஆண்டு ரொபர்ட் வோல்டர் சீ கமெக் என்பவரினால் இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டது. 1921 ஆம் ஆண்டு முதலாவது ஆசிய கரப்பந்து சுற்றுப்போட்டி நடைபெற்றது.

1947 ஆம் ஆண்டு 14 நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகளுடன் சர்வதேச கரப்பந்து சம்மேளனம் (FIVB) ஆரம்பிக்கப்பட்டது.

1949 ஆம் ஆண்டு ஆண்களுக்கானதும், 1952 ஆம் ஆண்டு பெண்களுக்கானதுமான முதலாவது சர்வதேச கரப்பந்துப் போட்டிகள் ஆரம்பிக்கப்பட்டன. 1964 இல் கரப்பந்துப் போட்டிகள் ஒலிம்பிக்கில் சேர்த்துக்கொள்ளப்பட்டன. 1991 ஆம் ஆண்டு இலங்கையின் தேசிய விளையாட்டாக இலங்கை அரசினால் பிரகடனம் செய்யப்பட்டது.

எம்.எம்.அதாத்,
மர்கஸ் அந்நூர் அ.கல்., நாவலடி.

# பிரபலங்களின் பிறந்த திகதிகள்

- தோமஸ் அல்வா எடிசன் - 1847.02.11
- அல்பர்ட் ஐன்ஸ்டீன் - 1879.03.14
- மகாத்மா காந்தி - 1869.10.02
- ஆபிரகாம் லிங்கன் - 1809.02.12
- சேர்.ஐசக் நியூட்டன் - 1642.12.25
- பராக் ஒபாமா - 1961.08.04
- டொக்டர் அப்துல் கலாம் - 1931.10.15
- சார்ல்ஸ் டார்வின் - 1809.02.12
- காமராஜர் - 1903.07.15
- பெரியார் இராஜாஜி - 1878.12.09

எம்.எம்.முஸ்தாக் அஹ்மட்,
அஸ்ஹர் கல்., அக்குறணை.



# சன்-யாட்-சென்



ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக சீன மக்கள் மஞ்சுவம்சப் பேரரசர்கள் ஆட்சியின்கீழ் இருந்து வந்தனர். அந்த ஆட்சியின் கொடுமை தாங்காமல் நாட்டில் பல புரட்சிகள் ஏற்பட்டன. அவை வெற்றியும் பெற்றன. அத்தகைய புரட்சிகளில் ஒன்றை நடத்திய சன்-யாட்-சென் என்பவர் புதிதாக அமைந்த மக்கள் அரசின் தலைவராக தேர்ந்தெடுக்கப் பட்டார். ஆட்சியில் இருப்பவர்களுடன் ஒத்துப்போக முடியாத காரணத்தால் பதவியிலிருந்து விலகிய இவர் தென் சீனப் பகுதியில் ஒரு குடியரசை அமைத்து 1921 இல் அதன் அதிபர் ஆனார்.

மன்னராட்சிக்கெதிராக,மாபெரும் போராட்டத்தை நடத்தியதால் அனைத்து சீன மக்களாலும் பெரிதும் மதிக்கப்பட்டார். பல முக்கிய சீர்திருத்தங்களைக்கொண்டு வந்த இவர் 1866 தொடக்கம் 1925 வரையான காலப்பகுதிகளில் வாழ்ந்தார்.

எச்.எம்.அஸ்லம்,
ஓட்டமாவடி தே.பாட.,
ஓட்டமாவடி.




நாவிற்கு இனிமையானது...!
நாதமாய் இன்புறக்கூடியது...!
நானாந்தம் புத்தணர்வு பெறுவது...!
நாலத் திசைகளிலும் தம்
நற்புகழ்ச்சியைப் பரவச் செய்தது!

நல் கவிஞர்களை தோற்றுவித்தது...!
நல் ஒழுக்க வரலாற்றை உலகுக்குத் தந்தது!
நன்மைகள் பல செய்ய நம்மைத் தூண்டியது!
நல்லறம் செய்து இல்லறம் நடத்த துணைகோலியது
நம் உயிரிலும் மேலான தமிழ்!

நுஸ்கியா கலீல்,
பாத்திமா பா.ம.வித்.,
கெலிஓயா.

## விஞ்ஞானத் துணுக்குகள் சில...

- சூரியனின் மேற்பரப்பு 6000°C வெப்பநிலையைக் கொண்டது.
- மண்ணெண்ணெயில் C, H ஆகிய மூலகங்களும் தேங்காய் எண்ணெயில் C,H,O ஆகிய மூலகங்களும் உள்ளன.
- ஹலியின் வால்வெள்ளி கடைசியாக 1986 இல் புவியில் காட்சியளித்தது.
- ஒரு ரசாயனத் தாக்கத்தின்போது, வெப்பசக்தி உறிஞ்சப்படின், அது 'அகவெப்பத்தாக்கம்' எனப்படும்.
- ஒரு ரசாயனத்தாக்கத்தின்போது, வெப்பசக்தி வெளிவிடப்படின், அது 'புறவெப்பத்தாக்கம்' எனப்படும்.
- செஞ்சூடான காபன்மீது நீராவியை செலுத்தும்போது, நீர்வாயு (Watergas) பெறப்படும்.
- இயற்கை இறப்பரானது, 'பொலி ஐசோபிரின்' என அழைக்கப்படும்.

*ஷஹீகா ரிஸ்னி,*
*உடதலவின்னை மடிகே, உடதலவின்னை.*

# சொர்க்கமும் நரகமும்



மன்னன் ஒருவனுக்கு சொர்க்கம் எது? நரகம் எது? என்ற ஒரு சந்தேகம் ஏற்பட்டுவிட்டது. இந்த சந்தேகத்திற்கு விடை தெரிந்துகொள்ளும் ஆவலுடன் அருகிலுள்ள காட்டில் தவம் செய்துகொண்டிருந்த முனிவரை நாடிச் சென்றான். அங்கு தவம் செய்துகொண்டிருந்த முனிவர் குதிரையின் காலடிச்சத்தம் கேட்டு விழித்தார். அங்கு மன்னன் குதிரையுடன் நிற்பதைப் பார்த்துவிட்டு மீண்டும் அமைதியாகத் தன் தவத்தைத் தொடர்ந்தார்.

மன்னனுக்கோ வியப்பு! தாம் வந்திருப்பதைப் பார்த்துவிட்டு மீண்டும் தவம் செய்யத் தொடங்கிவிட்டாரே... என்று கவலை கொண்டான்.

பின்னர், தன்னைச் சுதாகரித்துக்கொண்ட மன்னன் "முனிவரே! நரகம் என்றால் என்ன? சொர்க்கம் என்றால் என்ன?" என்று கேட்டான்.

ஆனால், முனிவரிடமிருந்து எவ்வித பதிலும் வரவில்லை.

"முனிவரே, நான் கேட்ட கேள்விக்கு பதில் என்ன?" என்று கேட்டான் சிறிது கோபமாக.

அதற்கும் முனிவரிடமிருந்து பதிலில்லை. இதனால் மன்னன் மிகுந்த கோபத்துடன் வாளை எடுத்தான்.

அப்போது முனிவர் கண்களைத் திறந்து "இதுதான் நரகம்" என்றார்.

"அடடா! ஆத்திரத்தால் முனிவருக்கு முன்னால் வாளை எடுத்து ஓங்கிவிட்டோமே" என்று வாளை உறைக்குள் போட்டான் மன்னன்.

உடனே முனிவர், "இதுதான் சொர்க்கம்" என்றார்.

மன்னனுக்கு எல்லாமே புரிந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




லபார்ஜ் மஹாவலி சீமெந்து நிறுவனம் தமது ஊழியர்களின் பிள்ளைகளுக்காக 'சிறுவர்களின் பாதுகாப்பு' என்ற தொனிப்பொருளில் சித்திரப் போட்டியொன்றை இலங்கை மன்றக் கல்லூரியில் நடாத்தியது. நான்கு பிரிவுகளின்கீழ் நடைபெற்ற இப்போட்டிகளில் வெற்றியீட்டிய சிறுவர்களைப் படத்தில் காணலாம்.



புனித ரமழான் மாதத்தை முன்னிட்டு, திஹாரிய கிரிடன்ஸ் ஃபவுன்டேஷனால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மத்ரஸாக்களுக்கு இடையிலான கலை-கலாசாரப் போட்டியின் பரிசளிப்பு விழா, அண்மையில் திஹாரிய-இஸ்லாமிய அங்கவீனர்களுக்கான கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. ஏழு மத்ரஸாக்கள் பங்குபற்றிய மேற்படி போட்டியில், முதலாம் இடத்தை ஹிஜ்ரா மாவத்தை 'மத்ரஸதுன் நூரிய்யா' பெற்றுக்கொண்டது. அந்த மத்ரஸா குழுவினரையே படத்தில் காண்கிறீர்கள். (முன்வரிசை- இ.வ): எம்.எஸ்.மொஹமட், எம். அம்மார், எம்.ராசிட், எம்.இஸ்மி, எம்.அப்துல்லா, எம்.அல்ஃபார். (பின்வரிசை- இ.வ): ரஹ்மி ஹசன், ஏ.ஆர்.முஹம்மத், எம்.முஜாஹிட், பைசல் அஹமட் (மௌலவி), எம்.நூர்ஜஹான், எம்.இப்கான், எம். அனாஸ். (சமூகமளிக்காதோர்): எஃப்.நூஹா, எஃப்.ரிப்தா.

*(படமும் தகவலும்: ஆர்.எம்.முனாஃப்)*


**விஜய் 'விழா உலா'**
**த.பெ.எண் 2037**
**கொழும்பு**



உரும்பிராய் கிழக்கைச் சேர்ந்த தவநேசன்-மேனகா தம்பதியரின் செல்வப் புதல்வி மைத்திரி, 01.10.2012 அன்று தனது முதலாவது பிறந்தநாளை வெகு விமர்சையாகக் கொண்டாடினார். இவரை, குடும்பத்தினர்கள் மற்றும் உறவினர்கள் அனைவரும் உரும்பிராய் கற்பக விநாயகரின் துணையால் பல்கலைகளும் கற்று, பல்லாண்டுகள் வாழ்கவென வாழ்த்துகின்றனர்.




அனுப்ப வேண்டிய முகவரி:
**கைவண்ணங்கள்**
**த.பெ.எண் 2037**
**கொழும்பு**




எஃப். அஸ்மா,
பரி.அந்திரேயர் ம.ம.வித்., நாவலப்பிட்டி.




ஏ.எச்.நுஃபா,
அல்-அக்ஷா ம.வித்., தல்கஸ்பிட்டி.



எஃப்.முபஸ்ஸிரா,
குருத்தல மு.ம.வித்., கடுகண்ணாவை.



பி.சசிதரன்,
மெதடிஸ் கல்லூரி, கந்தப்பளை.




என்.அவினாஸ்,
புனித மரியாள் த.ம.வித்., எட்டியாந்தோட்டை.



கு.சசிகரன்,
இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம்.

# பொலன்னறுவைக் கால ஓவியங்கள்



### பொலன்னறுவைக் கால ஓவியங்களின் விசேட பண்புகள்

✱ ஓவியங்கள் இருபரிமாணம், முப்பரிமாணங்களில் வரையப்பட்டுள்ளன. ஓவியங்களில் சிவப்பு, நீலம், மஞ்சள் ஆகிய நிறங்கள் கூடுதலாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. மண்ணிறம், வெள்ளை நிறம் என்பன குறைவாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

✱ இந்து-பௌத்த சமயத் தாக்கங்களை இந்த ஓவியங்களில் காணலாம்.

✱ பொலன்னறுவைக் கால ஓவியங்களில் அதிகமானவை ஜாதகக் கதைகளைக் குறிப்பதாக வரையப்பட்டுள்ளன.

✱ இந்த ஓவியங்களின் பின்னணியில் அதிகமாக மனித உருவங்கள் காணப்படுகின்றன.




✱ இந்த ஓவியங்கள் தொடர்ச்சியான ஓவியங்களாகக் காணப்படுகின்றன.

✱ சாந்தம், கருணை, கம்பீரம் போன்றவை வெளிப்படுத்தப்பட்டுள்ளன.


✱ அஜந்தாக் குகைத்தொடரின் 17 ஆவது குகையில் காணப்படும் 'பத்மபாணி போதிசத்துவரின் உருவம் போன்ற அமைப்பு இங்கு வரையப்பட்டுள்ளது.

### பொலன்னறுவைக் கால ஓவியங்கள் அழிவுக்குள்ளானமைக்கான காரணங்கள்

பொலன்னறுவைக் கால ஓவியங்கள் அழிவுற்றமைக்கு ஆய்வாளர் முன்வைக்கும் பிரதான கருத்துக்கள் சில:

✱ பொலன்னறுவைக் காலத்தின் இறுதிக்கட்டத்தில் கலிங்க மாகனின் கொடுங்கோல் ஆட்சி நிலவியது. இதனால், இப்பகுதி மக்கள் மலையகப் பகுதிகளை நோக்கி இடம்பெயர்ந்தனர். மாகன் தனது படை வீரர்களைத் தங்க வைப்பதற்கு பௌத்த ஆலயங்கள், குகைகளைப் பயன்படுத்தியுள்ளான். இதனால் ஓவியங்கள் அழிந்திருக்கலாம்.

✱ ஓவியங்கள் வரையப்பட்ட சுவர்களின் ஈரத்தன்மை, பூஞ்சணம், கிருமிகள் போன்றவற்றின் தாக்கங்களினால் இவை பாதிக்கப்பட்டிருக்கும்.



✱ பொலன்னறுவை ராச்சியம் வீழ்ச்சியடையக் காரணமான அனைத்துக் காரணங்களும் பொலன்னறுவைக் கலைப் படைப்புகள் அழிந்து போகக் காரணமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# செக் குடியரசு


தேசிய இலச்சினை

**அரசு:** பலகட்சி நாடாளுமன்றக் குடியரசு.

**அமைப்பு:** கி.பி. 870 இல் பொஹீமிய ஆட்சி நிர்வாகம்; கி.பி.1198 இல் பொஹீமிய பேரரசு; 28 ஒக்டோபர் 1918 இல் செக்கொஸ்லோவேக்கியா; 01ஜனவரி 1969 இல் செக் சோஸலிச குடியரசு; 01 ஜனவரி 1993 இல் செக் குடியரசு.

**தேசிய பெயர்:** செஸ்கா ரிபப்ளிக்கா.

**தேசிய விடுமுறைதினம்:** செக் தாபிக்கப்பட்ட தினமாகிய ஒக்டோபர் 28.







**ஜனாதிபதி** (2003): வோக்லோவ் க்ளாவ்ஸ்.

**பிரதமர்** (2010): பெட்ரி நெக்காஸ்.

## புவியியல்

செக் குடியரசின் மேற்கில் ஜேர்மனியும் வடக்கில் போலந்தும் கிழக்கில் ஸ்லோவேக்கியாவும் தெற்கில் ஒஸ்ட்ரியாவும் எல்லைகளாக அமைந்துள்ளன. உயரம் குறைந்த மலைத்தொடர்களால் சூழப்பட்டு, மேட்டு நிலங்களையும் கொண்டமைந்த நாடுதான் செக் குடியரசு. தென்மேற்கே கபேதியன், ஒரே சுடெடிக் மற்றும் சுமர்வா ஆகிய மலைகள் காணப்படுகின்றன. எல்பி, வோல்டாவா, மொராவா நதி மற்றும் ஓடர் நதி என்பன வடகிழக்கே உற்பத்தியாகி போல்டிக் கடலில் சங்கமம் ஆகின்றன. பெரும்பாலான செயற்கை ஏரிகளைக்கொண்ட செக் குடியரசில் செயற்கை ஏரிகளின் தொகை மாத்திரம் 125 இற்கும் அதிகமாகும்.

**மொத்தப்பரப்பு:** 30,450 ச.மைல் (78,866 ச.கி.மீற்றர்).

**நிலப்பரப்பு:** 29,836 ச.மைல் (77,276 ச.கி.மீற்றர்).

**நிலப்பிரிவுகள்:** 13 பிராந்தியங்கள்.

**தலைநகரமும் பெரிய நகரமும்:** ப்ராக் (ப்ராஹா).

**ஏனைய பெரிய நகரங்கள்:** ப்ரானோ, ஒஸ்ட்ராவா, பிலஸென், ஒலோமௌக்.

**உயர் மலைச்சிகரம்:** ஸ்நெஸ்கா (1,603 மீற்றர்).

**தாழ்மையம்:** எல்பி ஆறு (115 மீற்றர்).

**மக்கள்தொகை** (2010): 10,201,707.



**நாணயம்:** கொரூனா.

**இனக் குழுவினர்கள்:** செஸ், மொராவியன், ஸ்லோவெக், ஏனையவை.

**எழுத்தறிவு** (2003): 99%.

**இணையத்தளக் குறியீடு:** .cz

**தொலைபேசி குறியீட்டு இலக்கம்:** +4204

**தேசிய கீதம்**

Kde domov mùj, kde domov mùj?
Voda huèí po luèinách,
bory šumí po skalinách,
v sadì skví se jara kvìt,... என ஆரம்பமாகின்றது.

## வரலாறு

கி.பி. 5 ஆம் நூற்றாண்டில் ஸ்லேவிக் பூர்வீக குடிகள் இன்றைய செக் குடியரசின் பிராந்தியங்களான பொஹீமியா, மொராவியா, சைலீசியா ஆகிய பிரதேசங்களில் குடியேறினர். 10 ஆம் நூற்றாண்டு முதல் 16 ஆம் நூற்றாண்டுவரை பொஹீமிய மற்றும் மொராவிய பிரதேசங்கள் பொஹீமிய பேரரசால் ஆளப்பட்டன. 1618 முதல் 1648 வரை நடைபெற்ற முப்பதாண்டு யுத்தத்தில் இப்பிரதேசங்கள் முக்கிய பங்கு வகித்தன. அதனைத் தொடர்ந்து சுமார் 300 ஆண்டுகள் ஒஸ்ட்ரிய பேரரசின் ஓர் அங்கமாக இருந்தது. செக்கொஸ்லோவேக்கியா 1918 இல் சுதந்திரம் அடைந்தது. 1918 இல் செக் மற்றும் ஸ்லோவேக்கிய பிரகடனத்திற்கமைய, புதிதாக உருவாக்கப்பட்ட செக்கொஸ்லோவேக்கியாவில் நொவெம்பர் 14 இல் இரு முக்கிய அரசுகள் நிலவின. ஒன்று- செக்; மற்றையது - ஸ்லோவேக்கியா. 1939 மார்ச்சில் ஜேர்மனிய துருப்புகள் செக்கொஸ்லோவேக்கியாவை ஆக்கிரமித்தன. 1945 ஏப்ரலில் யுத்தம் முடிவுக்கு வந்ததும் 1938 ஆம் ஆண்டு மீண்டும் பழைய நிலைக்குத் திரும்பியது.




1946 தேர்தலில் வெற்றிபெற்ற கம்யூனிஸ்டுகள் நாட்டை சோவியத் யூனியனின் அதிகார வளையத்தில் இணைத்தனர். அதன்பின் பழமையான ஜனநாயக ஆட்சி முறை நீங்கி சோவியத் யூனியன் பாணியிலான ஆட்சி உருவானது. 1989 இல் இரத்தம் சிந்தா 'வெல்வெட் புரட்சி' மூலம் கம்யூனிச ஆதிக்கம் முடிவடைந்தது. 1993 இல் செக்கொஸ்லோவேக்கியா கூட்டாட்சி முடிவுக்கு வந்து செக் குடியரசு மற்றும் ஸ்லோவேக்கியா என இரண்டு சுதந்திர நாடுகள் உருவாகின.

## காலநிலை




இதமான மெல்லிய வெப்பத்தைக் கொண்ட கோடையும் குளிரான பனிப்படிவு வீழ்ச்சியையும்கொண்ட காலநிலையே செக்குடியரசில் நிலவுகின்றது. ஜனவரி மாதம் கடுங்குளிர் காலநிலையைக்கொண்ட மாதமாகும். அப்பொழுது நாளாந்த வெப்பநிலை -7°C ஆகும். ஜூலை மாதம் வெப்பம்கூடிய மாதமாகும். கோடை காலங்களில் நாளாந்த சராசரி வெப்பநிலை 26°C ஆகும். ஒக்டோபர் மாதத்தில் நாளாந்த வெப்பநிலை 15°C ஆக இருக்கும்.



'திரவ வானவில்' (The Liquid Rainbow) என்பது ஒரு நதியின் சிறப்புப் பெயர் ஆகும். இது தவிர, இந்த நதிக்கு 'ஏழு நிறங்களின் நதி', 'உலகின் மிக அழகிய நதி' என்றெல்லாம் சிறப்புப் பெயர்கள் உள்ளன. கொலம்பியாவின் சியரா டி லா மெகரீனா எனும் சிற்றூரை ஊடறுத்தே இந்த நதி பாய்கின்றது. இதன் பெயர் 'கானோ க்றிஸ்டேல்ஸ்' (Cano Cristales) என்பதாகும். இது 100 கிலோமீற்றர் நீளம் கொண்டது.

# 'திரவ வானவில்' பற்றி அறிவீர்களா?

இந்த நதிக்கு இத்தகைய சிறப்புப் பெயர்கள் வரக் காரணம், இந்த நதி பாய்ந்தோடும்போது, ஏழு விதமான நிறங்களைப் பிரதிபலிப்பதனால் ஆகும். இதன்படி, சிவப்பு, மஞ்சள், வெளிர்பச்சை, நீலம், கபிலம், கறுப்பு, இளஞ்சிவப்பு போன்ற நிறங்களை இந்த நதி பிரதிபலிக்கின்றது. இது எப்படி என்று யோசிக்கிறீர்களா?

பொதுவாக, நதியின் நிலப்பரப்பில் கல் மற்றும் மணல் என்பவையே இருக்கும். ஆனால், இந்த நதியின் நிலப்பரப்பில் பாறைகளும் பல வண்ணப் பாசிச் செடிகளுமே அதிகம் காணப்படுகின்றன. மழைக்காலத்தில் நதியின் நீரோட்ட வேகம் அதிகமாக இருப்பதால், பாசிச் செடிகள் அடித்துச் செல்லப்படுகின்றன. அவ்வாறே, வெயில் காலத்தில் பாசிச் செடிகளின் வளர்ச்சிக்குப் போதிய நீரோட்டம் இல்லாமல் இருக்கும். ஆகவே, இந்தக் காலத்தில் பாறைகள் மட்டுமே தென்படும். இந்த இரண்டு பருவநிலைக்கும் இடைப்பட்ட காலத்தில்தான் நதியில் நீர்மட்டம் சீராக இருக்கும். அத்துடன், இதுதான் பாசிகளின் வளர்ச்சிக்கு உகந்த காலமும் ஆகும். இக்காலத்தில் வெளிர் பச்சை, நீலம், சிவப்பு, இளஞ்சிவப்பு, கபிலம் கறுப்பு என மட்டுமல்லாமல், பல்வேறு கண்கவர் நிறங்களில் இந்த நதி அழகாகக் காட்சியளிக்கும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கணிதம்


பெயர்: .................................................... நேரம்: 1 மணித்தியாலம் 15 நிமிடங்கள்

★ *1 தொடக்கம் 24 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் மூன்று விடைகள் தரப்பட்டுள்ளன. சரியான விடையைத் தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.*

01)  இவ்(டீனஸ் கருவிகள்) காட்டும் எண் யாது?

1. 521 2. 125 3. 512

★ பின்வரும் செயல்பொறியைப் பயன்படுத்தி 2 ஆம், 3 ஆம் வினாக்களுக்கு விடை தருக.




02) இந்த இயந்திரத்தினுள் 8 ஐச் செலுத்தினால் கிடைக்கும் விடை யாது?

1. 17 2. 3 3. 5

03) இந்த இயந்திரத்தில் 4 ஐ விடையாகப் பெறுவதற்கு உட்செலுத்த வேண்டிய எண் யாது?

1. 8 2. 6 3. 9

04) சமபக்க முக்கோணி ஒன்றிற்கு சரியான சமச்சீர்க் கோடுகளின் எண்ணிக்கை?

1. 1 2. 3 3. 2

05) எந்தவொரு தாள் காசையும் வெளிச்சத்திற்கு எதிரே தூக்கிப்பிடித்தால் வெள்ளைப் பகுதியில் பிராணியொன்றின் படம் தெரியும். அது என்ன பிராணி?

1. யானை 2. வாளேந்திய சிங்கம் 3. கிளி

06) 9, 13, 17, 21, 25 எனும் எண்கோலத்தில் பொது வித்தியாசம் யாது?


1. 2 2. 4 3. 5

07) எண் 3,000 இன் முந்திய, பிந்திய எண்களைத் தெரிவுசெய்க?


1. 2990,3001 2. 2999, 3001 3. 2990,3100

08) எண் 3407 இல் நூறினிடத்தின் பெறுமானம் யாது?


1. 4 2. 100 3. 400

09)  எண்சட்டத்தில் உள்ள எண்ணை டீனஸ் கருவிகள்மூலம் காட்டினால்?




10)  இவ்வுருக் கோலத்தின் பொது வித்தியாசம் யாது?

1. 18 2. 6 3. 3

11) 

எழுதப்பட்ட கோலத்தில் அடுத்ததாக வரும் எண் யாது?

1. 5 2. 15 3. 14

★ வெற்றிடத்தில் வரவேண்டிய எண்ணைத் தெரிவுசெய்க.

12)

| | | | |
|---|---|---|---|
| 5 | 10 | 15 | 20 |
| 10 | 15 | 20 | 25 |
| 20 | 15 | 10 | 5 |
| 3 | 8 | — | 18 |

1. 45 2. 5 3. 13

13)

| | | | |
|---|---|---|---|
| 12 | 14 | 16 | 18 |
| 10 | 8 | 6 | 20 |
| 28 | 26 | 24 | — |

1. 30 2. 38 3. 22


14) கரும்பலகையொன்று செய்வதற்கு 1m நீளமுள்ள 5 பலகைகள் தேவையாகும். தேவையான பலகையின் மொத்த நீளம் யாது?

1. 25m 2. 6m 3. 5m

15) மெழுகுவர்த்தியின் நீளத்தை அளப்பதற்குப் பொருத்தமான அலகைத் தெரிவுசெய்க?

1. mm 2. m 3. cm

★ படத்தை அவதானித்து கீழ்வரும் வினாக்களுக்குரிய விடையைத் தெரிவுசெய்க




16) A பென்சிலின் நீளம் யாது?

1. 11cm 2. 5 cm 3. 5.5 cm

17) B பென்சிலின் நீளம் யாது?

1. 3cm 2. 6.5 cm 3. 2.5 cm





18)  இவ்வுருவில் நிறம் தீட்டப்படாத பகுதி என்ன பின்னம்?

1. $\frac{1}{2}$ 2. $\frac{4}{6}$ 3. $\frac{2}{6}$

19) L, N, Y, T, S என்னும் எழுத்துக்களில் செங்கோண எழுத்துக்களைத் தெரிவுசெய்க?

1. N, Y 2. Y,S 3. L,T

20)  இவ்வுருவிலுள்ள செங்கோணங்களின் எண்ணிக்கை யாது?

1. 20 2. 24 3. 22

21) ஒரு விளையாட்டு மைதானத்தைச் சுற்றி வர நீலம், சிவப்பு, பச்சை என்னும் நிறக் கொடிகள் அதே ஒழுங்கு முறையில் நாட்டப்பட்டுள்ளன. இதில் 52 ஆவது கொடியின் நிறம் என்ன?


1. சிவப்பு 2. நீலம் 3. பச்சை

22) 2008 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 1 ஆம் திகதி திங்கட்கிழமை எனின், இம்மாதம் 30 ஆம் திகதி? என்ன கிழமை?

1. திங்கள் 2. புதன் 3. செவ்வாய்

23) ஒரு சாதாரண வருடத்தில் வரும் மே (வைகாசி) மாதத்தில் எத்தனை நாட்கள் உள்ளன?

1. 28 2. 30 3. 31

24)  இவ்வுருவின் விளிம்புகளின் எண்ணிக்கை யாது?

1. 6 2. 12 3. 8

★ *25 தொடக்கம் 34 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் சரியான விடையை புள்ளிக்கோட்டில் எழுதுக.*

25) 1kg சீனியின் விலை ரூபாய் 60.00 ஆகும். 2kg 750gசீனி வாங்குவதற்கு எவ்வளவு பணம் தேவை?

ரூபாய் ..............................................

26) 2kg 500g நிறையுள்ள தேயிலையிலிருந்து, எத்தனை 250g தேயிலைப் பைக்கட்டுக்களைத் தயாரிக்க முடியும்? ..............................................

27) 418 தோடம்பழங்களை ஒருவருக்கு 4 வீதம் எத்தனை பேருக்குப் பகிர்ந்து கொடுக்கலாம்?

.......................... மீதி எவ்வளவு? ..............................

28) ஒரு வரிசையில் 57 தென்னம்பிள்ளைகள் நட முடியுமாயின், 6 வரிசையில் எத்தனை தென்னம்பிள்ளைகளை நட முடியும்? ..............................

29) நாடகமொன்றைப் பார்ப்பதற்கு 3 நாட்களில் 796, 89, 863 பேர் வருகை தந்திருந்தனர். நாடகம் பார்க்க வந்தவர்களின் மொத்த எண்ணிக்கை யாது?

..............................................

30) லவன் ரூபாய் 162.00 இற்கு ஒரு பால் மா பைக்கட் ஒன்றையும் ரூபாய் 208.00 இற்கு 1kg பருப்பையும் வாங்கிய பின்னர் ரூபாய் 500.00 தாள் காசைக் கொடுத்தான். அவனுக்கு கிடைத்த மீதிப் பணம் எவ்வளவு? ..............................


31) கட்டடமொன்றின் நீளம் 80m 45cm உம் இன்னொரு கட்டடத்தின் நீளம் 56m 78cm உம் எனின், நீளங்கூடிய கட்டடம் மற்றையதைவிட, எவ்வளவு நீளம் கூடியதாகும்?

..............................................

32) மாலா 8m 75cm நீளமான காகித சங்கிலியையும் சாந்தி 2m 38cm நீளமான காகித சங்கிலியையும் தயாரித்தனர். இருவரும் தயாரித்த காகித சங்கிலியின் மொத்த நீளம் யாது?

.........m .........cm

★ *மாணவர்கள் விரும்பும் நான்கு வகையான உணவு வகைகள் வரைபில் காட்டப்பட்டுள்ளது. வரைபை நன்கு அவதானித்து கீழ்வரும் வினாக்களுக்கு விடை தருக.*




33) இடியப்பத்தை விட, கடலையை எத்தனை மாணவர்கள் அதிகமாக விரும்புகின்றனர்?

..............................................


34) பாணை 9 மாணவர்கள் விரும்புகின்றனர். இதனை நிரல் வரைபில் குறித்து நிழற்றுக.

**விடைகள் அடுத்த இதழில் வெளிவரும்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# எலும்புகளால் உருவாக்கப்பட்ட கப்பல்

நெப்போலியன் காலத்தில் மூண்ட யுத்தங்களின் போது, பிரித்தானிய படையினரால் ஏராளமான பிரெஞ்ச் படையினர் கைது செய்யப்பட்டு, பிரித்தானியாவில் உள்ள சிறைகளில் அடைக்கப்பட்டனர். பல வருடங்களாக தண்டனை அனுபவித்து வந்த இவர்களில் சிலர் பொழுதுபோகாத நேரங்களில் சிறியளவிலான கப்பல் மாதிரிகளை உருவாக்கினர். சிறைகளில் வழங்கப்படும் மாமிச உணவுகளில் காணப்படும் எலும்புகளை சேகரித்து அந்த எலும்புகளில் இருந்தே, இவ்வாறான



கப்பல் மாதிரிகளை உருவாக்கினர். அதுமட்டுமன்றி, சிறை வளாகத்தில் உள்ள கல்லறைகளில் இருந்தும் மனித எலும்புகளைச் சேகரித்து கப்பல் மாதிரிகளைத் தயாரித்துள்ளனர். இவைதவிர, காகிதங்கள், தலைமயிர், நூல் ஆகியவற்றையும் பயன்படுத்தியுள்ளனர்.

பல வருடங்களின் பின்னரும் பாதுகாக்கப்பட்டு வரும் இந்த அரிய மாதிரிக் கப்பல்கள் கைகள் பல மாறி, மாறி தற்போது பிரித்தானியாவில் உள்ள, ஏலம் விடும் நிறுவனத்திடம் வந்து சேர்ந்துள்ளது. இவற்றை விரைவில் ஏலத்தில் விட முடிவு செய்துள்ளனர். இவை பல லட்சம் ரூபாய்க்கு ஏலம் போகலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.



## விஜய் மாணவர் கழகம்



அங். இல: 4784

இ.ராபிஷன்,
அன்புவழிபுரம்,
திருகோணமலை.



அங். இல: 4785

செ.கேனுகா,
பெரியகுளம்,
கண்டாவளை.



அங். இல: 4786

எம்.அப்ஸர்,
பிரான்ஸ் சிற்றி,
மருதமுனை.



அங். இல: 4787

டீ.நிலுக்கா,
கித்தோட்ட,



அங். இல: 4788

ஏ.எம்.அதீக்,
திஹாரிய வீதி,
உடுகொட.



அங். இல: 4789

பா.ஆன் எமிலினி,
சென்யூட்,
இளவாலை.



அங். இல: 4790

ந.சஜீவன்,
நீர்பாசன விடுதி,
வவுனியா.



அங். இல: 4791

ம.மின்ஹாஜ்,
ஹுதா வீதி,
காத்தான்குடி-03.



அங். இல: 4792

தி.யதுர்ஷனா,
1 ஆம் வட்டாரம்,
புதுக்குடியிருப்பு.



அங். இல: 4793

எம்.லரீப்,
பிட்டியகதர,
பானகமுவ.



அங். இல: 4794

டீ.எச்.முபாரக்,
மாளிகாவத்த,
கொழும்பு-10.



அங். இல: 4795

கி.திவாகரன்,
புலோப்பளை கிழக்கு,
பளை.

## பாட்டி சொன்ன கதை

கதை, ஓவியம்: சதாசிவம் சிவகுமார்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலோசனை சபையின் தீர்மானம்

ஆங்கிலேய ஆலோசனை சபையின் கட்டளைகளுக்கு எதிராகவும் முரணாகவும் செயற்பட றொபர்ட் அன்ட்ரூஸ் என்பவர் முனைந்தார். எனினும், ஆலோசனை சபையால் தீர்மானிக்கப்பட்ட ஏனைய தீர்மானங்கள் அனைத்தும் நிறைவேற்றப்பட்டன. அதாவது, கறுவா பயிர்ச் செய்கையை மேற்கொள்ளுதல், உப்பு வர்த்தகத்தை அரசுடைமையாக்குதல், பாதைவரி அறவிடல், பாக்கு, புகையிலை மற்றும் புடவை வகைகள் மற்றும் மதுபான ஏற்றுமதி சுங்கவரியை அறவிடுதல் போன்றவற்றை நிறைவேற்றினர்.

இதேவேளை, ஆங்கில ஆலோசனை சபை கண்டி மன்னருடன் மேற்கொள்ள எண்ணிய ஒப்பந்தத்தைக் கண்டி மன்னர் ஏற்றுக் கொள்ளாதது குறித்து ஆலோசனை சபை மகிழ்ச்சியடைந்தது. அது எதிர்பாராதவிதமாக ஆங்கிலேயருக்கு நன்மை தரும் விடயமாக அமைந்துவிட்டது. கண்டி மன்னர் அந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டிருந்தால் கண்டி மன்னருக்கு ஆங்கிலேயரால் நிறைவேற்றப்படக் கூடிய பல காரியங்களைச் செயற்படுத்தக்கூடியதாக இருந்திருக்கும். எனினும், தொடர்ந்து


ஆலோசனை சபையின் கடமைகள் முறையாக நடைமுறைப்படுத்தப்பட்டமையால் ஆங்கிலேயரின் ஆட்சி நிர்வாகம் ஆரம்பகாலத்தில் வினைத்திறன் மிக்கதாகவும் அமைதியானதாகவும் ஆறுதல் அளிக்கக்கூடியதாகவும் இருந்தது. எனினும், அப்போது ஆள்பதியாக இருந்தவரை விரும்பாத சில சென்னை சிவில் நிர்வாக அதிகாரிகளால் மாத்திரமே அமைதியான இச்சூழ்நிலைக்கு சற்றுக் குந்தக நிலை ஏற்பட்டது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்காலத்தில் இணையத்தின் மொழி என்ன?

ஆங்கில மொழியே இணையத்தின் மிகவும் பிரபல்யமான மொழியாக, இன்றளவிலும் காணப்படுகின்றது. நாளாந்தம் ஆங்கில மொழியில் கருமமாற்றும் 550 மில்லியனுக்கும் அதிகமானவர்கள் இணையத்தில் உலா வந்துகொண்டேயிருக்கின்றனர். ஆனால், கடந்த ஆண்டு மட்டும் சீன மொழியைப் பயன்படுத்தும் 36 மில்லியன் புதிய பயனர்கள் இணையத்துடன் இணைந்துகொண்டார்கள். இதன் அடிப்படையில், சீன மொழியை இணையத்தின் அடைவில் பாவிக்கின்றவர்களின் எண்ணிக்கை தற்போதளவில் 440 மில்லியனையும் தாண்டியிருக்கிறது.




The Next Web தளத்தின் ஆய்வின்படி, சீன மொழியானது, இணையத்தில் பாவிக்கப்படும் முதன்மையான மொழியாக வெறும் ஐந்து ஆண்டுகளுக்குள் மாறிவிடக்கூடிய சாத்தியங்கள் இருப்பதாக எதிர்வு கூறப்படுகிறது.

எது எப்படியாயினும், மேற்குலக நாடுகளோடு ஒப்பிடுகையில், இணைய உட்கட்டமைப்பு வசதிகளில், சீனா பின்தங்கியிருப்பதும் சுட்டிக்காட்டப்பட வேண்டியதே!



# சத்தம் போடாத கணினி வேண்டுமா?

கணினியில் காணப்படும் ஒலிபெருக்கிகளை off செய்து வைத்தால் அதிலிருந்து வரும் சத்தங்கள் எமக்கு ஒருபோதும் கேட்காது. இந்த வேலையை தன்னியக்கமாகவே செய்யக்கூடிய ஏதாவது நிலை இருந்தால் எப்படியிருக்கும்?

அதற்கும் ஒரு மென்பொருள் உள்ளது. இதனைப் பயன்படுத்தி எமது கணினியில் காணப்படும் Sound ஐ mute செய்துகொள்ள முடியும். இவ்வாறு mute செய்தால், கணினியிலிருந்து சத்தமே வராது. mute ஆக வேண்டிய நேரத்தைக் குறித்த மென்பொருளில் வழங்கினாலே போதும். மிகச் சிறப்பாக அந்த நேரத்தில் mute நிலைக்கு கணினியைத் தன்னியக்கமாகவே அம்மென்பொருள் கொண்டுவரும்.

மென்பொருள் பற்றிய விபரங்களை http://www.pcworld.com/product/947685/mute.html எனும் இணைப்பினூடாகப் பெற்றுக்கொள்ள முடியும்.



# நுகர்தல் மட்டும் போதாது; படைக்கவும் வேண்டும்



'தோற்றுப் போவோம்' என்கின்ற பயம் இல்லாமல் இருப்பதுதான், படைப்பாக்கத்திறனை விசாலமாக்க உற்ற துணை. தோற்காதவர்கள் எவரும் புதிதாக எதையும் உருவாக்கியதாக சரித்திரத்தில் இல்லை. புதியவை படைக்க வேண்டும்; அதன்பால் நுட்பத்தை இணைக்க வேண்டும்; எம்மைச் சூழ வாழ்வோர் அதனால் பயனடைய வேண்டும்; இது போன்ற ஆர்வங்களோடு பயணங்களைத் தொடருங்கள். புதியவை உதிக்கும்; உலகமே உங்களைப் பற்றிப் பேசும். ஆகவே புதியவை படைக்க நீங்கள் தயாரா?

# உயிரினங்களின் rRNA மாதிரி வரைபு

3,000 வகையான உயிரினங்களின் rRNA மாதிரிகளை ஆய்ந்தறிந்து வரையப்பட்ட வரைபையே நீங்கள் இங்கு காண்கிறீர்கள். பன்மைத்துவம் விசாலமாகியிருக்கின்ற உயிர்க்கோலத்தில், மனித இனத்தின் மரபணுக்களின் இடத்தை இந்த வரைபில் குறித்துக் காட்டப்பட்டுள்ளதை நீங்கள் காணலாம்.

இந்த ஆய்விற்கான உயிரின மாதிரியை உருவாக்குவதற்காக, உயிரினங்களின் தேர்வு, குறிப்பிட்ட இனத்தின் மொத்த எண்ணிக்கைக்கு விகிதசமனாக எடுக்கப்பட்டது. ஒன்பது மில்லியன் வேறுபட்ட உயிரினங்கள் உலகில் காணப்படுவதாக உத்தேசக் கணக்கெடுப்பு எடுக்கப்பட்டிருந்தாலும், அதில் 1.7 மில்லியன் வேறுவகைப்பட்ட உயிரினங்கள் மட்டுமே இதுவரையில் கண்டறியப்பட்டு பெயரிடப்பட்டுள்ளன.

'Life of Tree' என்ற இந்த வரைபின் உருவாக்குனர்கள், டெக்ஸாஸ் பல்கலைக்கழக பேராசிரியர்களான, David M. Hillis, Derrick Zwickl மற்றும் Robin Gutell ஆகியோராவர். http://www.zo.utexas.edu/faculty/antisense/tree.pdf என்ற இணைப்பினூடாக அதனைப் பார்வையிடலாம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணங்களுக்கு முகவரி





எண்ணங்களுக்கு முகவரி கொடுப்பது பல நிலைகளில் எய்தப்படலாம். எழுதுவதும் அதில் ஒன்று. அந்தவகையில், உங்களுக்குத் தெரிந்தவற்றை உலகளவில் வாழ்கின்ற மக்களோடு பகிர்ந்துகொள்கின்ற வாய்ப்பை 'இணையம்' வழங்குகின்றது. இணையத்தில் வலைப்பதிவுகளை இலவசமாகத் தொடங்கி எமது எண்ணங்களுக்கு முகவரி கொடுக்கலாம்.


இந்தச் சேவையை இலவசமாக வழங்கும் பல நிறுவனங்கள் இணையத்தில் காணப்பட்டாலும், Blogger மற்றும் Wordpress அவற்றுள் பிரபலமானவை. இந்த வரிசையில் இரத்தினச் சுருக்கமாய் எண்ணங்களைப் பகிர்ந்துகொள்ளத்தக்க வகையில் அழகிய வலைப்பதிப்பும் இடைமுகத்தைத் (Interface) தரும் சேவையாக 'tumblr' ஐக் கருதலாம். இதற்கமைய, tumblr.com எனும் இந்தச் சேவையைப் பயன்படுத்தி உங்கள் எண்ணங்களுக்கு முகவரி கொடுக்கலாம்.

# அற்புதமான இடைமுகம்

இணையத்தில் மில்லியன் கணக்கான இணையப்பக்கங்கள் காணப்படுவதோடு, நாளாந்தம் இதன் எண்ணிக்கை துரிதமாக வளர்ச்சி கண்டுகொண்டே செல்கிறது. அதனால், எந்த இணையத்தை வாசிப்பது?, எதை விடுவது? போன்ற கேள்விகள் எம்மில் தோன்றிவிடுகின்றன. இந்தக் கேள்விகளுக்கு தீர்வு அளிக்கும் வகையில் இணையப்பக்கங்களை பொருத்தமான முறையில் ஒழுங்குபடுத்தி வைத்து அதன் புதிய உள்ளடக்கங்களை RSS (Really Simple Syndication) எனப்படுகின்ற செய்தியோடை மூலம் பெறுவதற்கேற்ற அற்புதமான இடைமுகத்தை Google Reader தருகிறது. இதனால், குறித்த இணையத் தளங்களுக்கு அடிக்கடி செல்லாமலேயே, அந்த இணையத்தில் புதிதாக இணைக்கப்பட்டுள்ள விடயங்களை Google Reader இன் இடைமுகத்தில் (Interface) காணலாம். http://reader.google.com




# கூகிள் கணிப்பொறி




கூகிளில் நீங்கள் கணிதப் பிரசினங்களை அளித்துத் தேடினால், அதற்கான விடையை முதலில் காட்டும் என்பதை அறிவீர்கள். தற்போது அவ்வாறான பிரசினங்களைத் தேடினால், கணிப்பொறியொன்றை விடைகளோடு காட்சிப்படுத்துகிறது கூகிள். அத்தோடு, 'Calculator' எனத் தேடினாலும், இந்த கணிப்பொறி காட்சியளிக்கும். அதில் உங்கள் கணக்குகளைத் தீர்க்கலாம். https://www.google.com/search?q=calculator சென்றுதான் பாருங்களேன்.


இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2012, ஒக்டோபர் மாதம் 03 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.



# நுட்பத்தினூடாக அழகிய மாற்றங்களைக் காண்போம்!



'நுட்பம்' பகுதியில் தொழில்நுட்பங்கள் சார்பான தெளிவான புரிதலைப் பெற்றுக்கொள்ள முயற்சிப்போம். மனித நாகரிகத்தின் எழுச்சிக்குக் காரணமாயிருந்த கருவிக் கையாட்சியும் மொழிப்பயன்பாடும் தோன்றிய காலத்திலிருந்தே, நுட்பங்கள் சார்பான மனிதனின் கண்டுபிடிப்பு, தேடல் என்பன தோன்றியதெனலாம். இன்றளவில், கணினிகள்தான் நுட்பம் என்றவில் மொத்த தொழில்நுட்பத்தின் அடிநாதமாய் அவை விளங்குகின்றன.



ஆனாலும், கணினியின் தோற்றத்திற்கு காரணமாக அமைந்த புராதன நிலைக் கருவிகளின் உத்வேகம் இங்கு மறந்துவிடக் கூடியதொன்றன்று.

நுட்பங்களின் அதீத வளர்ச்சியின் காரணமாக, அவை கொண்டுதரக்கூடிய அற்புதமான மாற்றங்கள் பற்றித் தொடர்ச்சியாக எதிர்வு கூறப்படுகின்றன. இந்த எதிர்வுகூறல்கள், எதிர்வுகூறப்பட்ட கால எல்லைக்கு முன்னதாகவே நடந்தேறிவிடுகின்ற விந்தைகளும் தொடர்ந்து நடந்துகொண்டுதான் இருக்கின்றன. வேகமான இந்த மாற்றங்களோடு, நாமும் பயணிக்க வேண்டியிருக்கிறது. இந்தப் பயணத்தில் நாளைய தினத்திற்கான ஆயத்தங்கள் பற்றிய தேடல், தேவை என எல்லாமே இருக்க வேண்டும்.

அந்தவகையில், மாறிக்கொண்டே செல்கின்ற இந்த நுட்பங்கள் பற்றிய புரிதல்களை விசாலமாக்குவது அத்தியாவசியமான ஒன்றாகிவிட்டது. கணினியின்மூலம் மொழிகள் கடந்து-வித்தைகள், விந்தைகள் செய்யக்கூடிய சாத்தியங்கள் நிறையவே உருவாக்கப்பட்டுள்ளன.

ஆகவே, இந்த நுட்பம் பகுதியினூடாக, நுட்பங்கள் பற்றிய புரிதல்களை விசாலமாக்கி நுட்பங்களோடு இணைந்தாற்போல், உங்களின் எண்ணங்களைப் பயணிக்கச் செய்து அழகிய மாற்றங்களை உருவாக்க, உத்வேகம் தருவதற்கு திடசங்கல்பம் பூண்டுள்ளோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இந்த முட்கள் குத்தினால் மட்டுமே விஷம் வெளியேறும். இந்த முட்களைப் பயன்படுத்தி இரையைக் கைப்பற்றுவதற்கும்

எதிரியினை விரட்டி அடிப்பதற்கும் அவற்றை செயல் இழக்கச் செய்வதற்கும் கொல்லவும் இந்த மீன்கள் ஆற்றல் பெற்றவையாக உள்ளன. பண்டைய கி[illegible]கர்கள் மின்சாரத்தைப் பாய்ச்சும் [illegible]ருவகை திருக்கை மீன்களையும் ட்ரோபிடோ மீன்களையும் பயன்படுத்தி மூட்டு வீக்கத்திற்கான சிகிச்சைகளை மேற்கொண்டதற்கான வரலாற்று சான்றுகள் உள்ளன.

## பதில் தாக்குதல் தொடுப்போர்

ஆபத்துக்களின்போது, பதில் தாக்குதல்களை மேற்கொள்ளும் மின்சார மீன்களும் உள்ளன. 'ஸ்டிங்க் ரே' எனப்படும் திருக்கை மீன்கள் இவற்றில் குறிப்பிடத்தக்கவை. இவற்றின் முள்ளந்தண்டு கத்தியைப் போன்ற வடிவத்தினைக் கொண்டது. நீண்ட வாலின் நுனியில் பல் போன்றதோர் அமைப்பு உள்ளது. வாலை சுழற்றி அடிப்பதன் மூலம் எதிரிகளைத் தாக்கும் வல்லமை கொண்டது. கொடுக்குப் போன்ற அமைப்புடைய இந்தத் திருக்கை மீன்களின் முள்ளந்தண்டில் விஷத் தன்மை இருக்கின்றது. இந்த விஷமானது, உடலிலுள்ள விஷச் சுரப்பியினூடாக சுரக்கப்படுகின்றது.

## தாய்லாந்து நாகம்

இந்தப் பாம்பின் விஷத்தினைப் பயன்படுத்தித் தயாரிக்கப்படும் 'மியுனேகைன்' எனும் மருந்து, சருமம் தடிப்படைதல் உட்பட, நரம்புத் தொகுதியின் சிக்கலான நோய் நிலைமைகளுக்குத் தீர்வாக அமைகின்றது.



## ராட்சத இஸ்ரேலிய தேள்

5 அங்குலம் நீளம்கொண்ட நன்கு வளர்ச்சி பெற்ற இந்த தேளானது, 'கொடிய கொலையாளி' என்று கருதப்படுகின்றது. காரணம், அதன் வால்பகுதியில் உள்ள கொடிய விஷமாகும். எனினும், அந்த விஷத்தில் இருந்து பெறப்படும் 'குளோரோடெக்சின்' என்ற ரசாயனப் பதார்த்தமானது, குணப்படுத்த முடியாத கொடிய வகை மூளைப் புற்றுநோய்க்கு மருந்தாக அமைகின்றது.

## மருந்தாகும் விஷம்

இயற்கையைப் பயன்படுத்தி மருந்து தயாரிப்பதற்கு சில விஷம் கொண்ட விலங்குகளும் தாவரங்களும் பயன்படுகின்றன. தற்போது பாவனையில் உள்ள மருந்துகளில் பெரும்பாலானவை இயற்கையில் கிடைக்கும் கொடிய விஷத்தைக் கொண்டே தயாரிக்கப்படுகின்றன. தென் அமெரிக்காவின் பழங்குடி மக்கள் ஒருவகை கொடிய தாவரத்திலிருந்து பெறப்படும் விஷத்தைப் பயன்படுத்துகின்றனர். இந்த விஷத்தைப் பயன்படுத்தி தசைநார்களைத் தளர்த்தும் மருந்து தயாரிக்கப்படுகின்றது. அதுமட்டுமன்றி, Saw Scaled Viper எனப்படும் 'விரியன்' வகைப் பாம்பின் விஷத்திலிருந்து குருதி உறைவுக்குத் தேவையான மருந்து தயாரிக்கப்படுகின்றது. இவ்வாறே, மருந்துகளின் உற்பத்தியின்போது, இயற்கையின் விஷ ரசாயனம் பயன்படுத்தப்படுகிறது.

## விஷத்தை விஷத்தால் முறியடித்தல்

விஷம்கொண்ட உயிரினங்களினால் நாம் தாக்குதலுக்கு உள்ளானால், அந்த விஷத்தை முறியடிக்க மற்றுமொரு விஷத்தினால் முடிகின்றது. அந்தவகையில், பாம்பு தீண்டுவதன் மூலம் பரவும் விஷத்தை முறியடிப்பதற்காக, பாம்புகளின் விஷத்தைக் குதிரைகளின் உடலில் செலுத்தி, பாம்பு விஷத்துக்கு எதிராக செயற்படக்கூடியவாறான எதிர்ப்புச்சக்தியைக்கொண்ட பிறபொருள் தயாரிக்கப்படுகின்றது.

அதாவது, குதிரைகளின் உடலில் பாம்புகளின் விஷம் உட்செலுத்தப்பட்ட பின்னர் அவற்றின் உடலின் இரத்த மாதிரிகளில் அந்த விஷத்தை முறியடிக்கும் எதிர்ப்புச்சக்தி கொண்ட பிறபொருள் உற்பத்தியாகின்றது. இந்த பிறபொருளே விஷத்துக்கு எதிரான மருந்தாகப் பயன்படுத்தப்படுகின்றது. குதிரைகளில் இருந்து பெறப்படும் இந்த பிறபொருள் சில வேளைகளில் சிலருக்கு ஒவ்வாமையை ஏற்படுத்திவிடுவதனால், தற்போது ஆடுகளையும் செம்மறி ஆடுகளையும் இந்த பிறபொருள் உற்பத்திக்காகப் பயன்படுத்துகின்றனர்.

(இ)



## மின்சாரம் பாய்ச்சுபவர்கள்

எதிரிகளிடமிருந்து தம்மைப் பாதுகாத்துக்கொள்ள மின்சாரத் தினைப் பாய்ச்சும் மீன்களில் தென் அமெரிக்காவின் மின்சார விலாங்கு மீன்கள் பிரபல்யம் பெற்றவை. இவை நன்கு வளர்ச்சி பெற்ற நிலையில், 2.7 மீற்றர் (9 அடி) நீளம் கொண்டவையாக இருக்கும். இந்த விலாங்கு மீன்களைத் தொடுவது மின் கம்பியினைத் தொடுவதற்கு ஒப்பானதாகும். ஆற்றைக் கடக்கும் குதிரைகள் மற்றும் விலங்குகளின் கால்களில் இவை பட்டுவிட்டால் அவற்றின் கால்களில் மின்சாரம் பாய்ச்சப்பட்டு அவை செயல் இழந்துவிடுகின்றன.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ආයුබෝවන்
# ஆயுபோவன்
# வணக்கம்

**இன்றைய பாடத்தில் அம்மாவுக்கும் மகனுக்கும் இடையிலான ஓர் உரையாடலைப் பார்ப்போம்**

புதா: **අම්මේ! දැන් අපිට නිවාඩුනේ. මම නැන්දලගේ ගෙදර යන්නද?**
அம்மே! தென் அபிட்ட நிவாடுனே. மம நெந்தலகே கெதற யன்னத?
மகன்: **அம்மா இப்போது எங்களுக்கு விடுமுறைதானே. நான் மாமி வீட்டுக்குப் போகவா?**

அம்மா: **ඔයාට නිවාඩු කාලයේදී කරන්න ගෙදර වැඩ දීලා තියෙනව නේද?**
ஒயாட்ட நிவாடு காலயேதி கறன்ன கெதற வெட தீலா தியெனவா நேத?
அம்மா: **உங்களுக்கு விடுமுறை நாட்களில் செய்வதற்கென வீட்டு வேலைகள் வழங்கப்பட்டிருக்குத்தானே?**

புதா: **ඔව් අම්මේ. මම පොත් අරගෙන ගිහින් එහේදී කරන්නම්.**
ஒவ் அம்மே மம பொத் அறகென கிஹின் எஹேதி கறன்னம்.
மகன்: **ஆம் அம்மா. நான் புத்தகங்களை எடுத்துக்கொண்டுபோய் அங்கே செய்கின்றேன்.**

அம்மா: **දන්නේ නැති දේවල් කාගෙන්ද අහගන්නේ?**
தன்னே நெதி தேவல் காகென்த அஹகன்னே?
அம்மா: **தெரியாத விடயங்களை யாரிடம் கேட்டுக்கொள்வது?**

புதா: **මම අක්කාගෙන් අහගන්නම්. මට මල්ලිත් එක්ක සෙල්ලම් කරන්නත් පුළුවන්.**
மம அக்காகென் அஹகன்னம். மட்ட மல்லித் எக்க செல்லம் கறன்னத் புலுவன்.
மகன்: **நான் அக்காவிடம் கேட்டுக்கொள்கிறேன். எனக்குத் தம்பியுடன் விளையாடவும் முடியும்.**

அம்மா: **සවස තාත්තා ආවාම තාත්තාගෙන් අහන්න.**
சவச தாத்தா ஆவாம தாத்தாகென் அஹன்ன.
அம்மா: **பின்னேரம் அப்பா வந்ததும் அப்பாவிடம் கேட்டுப்பாருங்கள்.**

புதா: **හොඳයි අම්මේ.**
ஹொந்தய் அம்மே.
மகன்: **நல்லது அம்மா.**

## பயிற்சிகள்

**பின்வரும் வாக்கியங்களைச் சிங்களத்தில் மொழிபெயர்க்க**

i. இப்போது எங்களுக்கு விடுமுறை.
..........................................................................
ii. மாமி வீட்டுக்குப் போகவா?
..........................................................................
iii. தம்பியுடன் விளையாடவும் முடியும்.
..........................................................................

**இடைவெளிகளை நிரப்புக**

**1. අම්මේ! දැන් ............................ නිවාඩුනේ.**
**2. ............................ වැඩ දීලා තියෙනව නේද?**
**3. මම අක්කාගෙන් ............................**
**4. ............................ කරන්නත් පුළුවන්.**






**He, She, It** முதலான பிரதிப் பெயர்ச்சொற்களை (Pronouns) Has எனும் துணை வினைச்சொல்லுடன் கையாண்டு அமைக்கப்பட்ட உடன்பாடு நிலை வாக்கியங்களை முன்னைய பாடங்களில் கற்றோம் அல்லவா? அவற்றின் எதிர்மறை வாக்கியங்களை இங்கே ஒப்பிட்டுப் பயில்வோம்.

(அ) அவனிடம் ஒரு சைக்கிள் உண்டு.
He has a bicycle.
(உடன்பாடு வாக்கியம் -Affirmative Sentence)

(ஆ) அவனிடம் ஒரு சைக்கிள் இல்லை.
He hasn't a bicycle.
(எதிர்மறை வாக்கியம் -Negative Sentence)

**குறிப்பு:** இந்த எதிர்மறை வாக்கியத்தை வேறோர் இலக்கண ரீதியாகப் பின்வருமாறு அமைக்கலாம்.

* He doesn't have a bicycle.
அவனிடம் ஒரு சைக்கிள் இல்லை.

* He has.
அவனிடம் உண்டு.
(உடன்பாடு -Affirmative)

* He hasn't.
அவனிடம் இல்லை.
(He doesn't have)

* * * *

(இ) அவளிடம் ஒரு காசுப்பை உண்டு.
She has a purse.
(உடன்பாடு வாக்கியம் -Affirmative Sentence)

(ஈ) அவளிடம் ஒரு காசுப்பை இல்லை.
She hasn't a purse.
(எதிர்மறை வாக்கியம் -Negative Sentence)

* She doesn't have a purse.

* She has.
அவளிடம் உண்டு.
(உடன்பாடு -Affirmative)

* She hasn't.
அவளிடம் இல்லை.
(She doesn't have)

* * * *

(உ) அதற்குக் கட்டையான ஒரு வால் உண்டு.
It has a short tail.
(உடன்பாடு வாக்கியம் -Affirmative Sentence)

(ஊ) அதற்கு நீளமான ஒரு வால் இல்லை.
It hasn't a long tail.
(எதிர்மறை வாக்கியம் -Negative Sentence)

* It doesn't have a long tail.

* It has.
அதற்கு உண்டு.
(உடன்பாடு -Affirmative)

* It hasn't.
அதற்கு இல்லை.
(It doesn't have)

* * * *

(எ) இந்தப் பூனைக்கு கட்டையான ஒரு வால் உண்டு.
This cat has a short tail.
(உடன்பாடு வாக்கியம் -Affirmative Sentence)

(ஏ) இந்தப் பூனைக்கு நீளமான ஒரு வால் இல்லை.
This cat hasn't a long tail.
(எதிர்மறை வாக்கியம் -Negative Sentence)

* This cat doesn't have a long tail.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# செம்மைத்துளியானின்... மலேசிய நினைவுகள்

பயணக்கட்டுரை

மலேசியா பற்றிய தகவல்களை அறிந்துகொள்வதற்காக, அவ்வப்போது, இணையத் தளத்தில் ஊடுருவியதன் பிரதிபலனே, மலேசியாவை நேரில் சென்று பார்த்துவிட வேண்டுமென்ற ஆவல் துளிர்விடக் காரணமாக அமைந்துவிட்டது. முன்கூட்டியே பிரயாண ஆயத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம் வந்து சேர்ந்தேன். வழமையான விமான நிலைய சோதனைகளைத் தாண்டி, விமானத்துக்குள் நுழைந்தேன். குறிப்பிட்ட நேரத்தில் புறப்பட்ட அந்த 'எயார் ஆசிய விமானம்' கோலாலம்பூர் விமான நிலையத்தில் மலேசிய நேரப்படி, சரியாகப் பி.ப.2 மணிக்கு தரையிறங்கியது. கைக்கடிகாரத்தைப் பார்த்த போது, அது இலங்கை நேரம் பி.ப 4.30 மணி எனக் காட்டியது.



### மலேசியாப் பயணத்தின் போது சிங்கப்பூர் சென்றமை

மலேசியா என்கின்றபோது, அதில் சிங்கப்பூரும் தொக்கி நிற்கின்றது. இவ்விரு நாடுகளும் ஒருகாலத்தில் இணைந்திருந்து பிரிந்துவிட்டமை கசப்பான ஓர் உண்மையாகும். சிங்கப்பூரிலிருந்து தரைமார்க்கமாகச் சென்று மலேசியாவைப் பார்வையிடுவதானது, மலேசியாவை முற்றுமுழுதாகப் பார்த்த திருப்தியை அளிக்கும்.

கோலாலம்பூர் விமான நிலையத்தைச் சுற்றிப் பார்க்கின்ற சந்தர்ப்பம் கிடைத்தது. வழமையைவிட, பிரயாண நிரலில் மலேசியா ஊடாக சிங்கப்பூர் வரை விமானத்தில் சென்று பின்னர் மீண்டும் சிங்கப்பூரில் இருந்து மலேசியாவுக்கு தரைமார்க்கமாக சொகுசு பஸ்ஸில் செல்லத் திட்டமிட்டிருந்தேன்.

### விடுமுறைக் காலமாதலால் சனநெரிசல் அதிகம்

கோலாலம்பூர் விமான நிலையத்தில் இறங்கி சிங்கப்பூர் இணைப்பு விமானம் வரும் வரைக்கும் இரண்டு மணித்தியாலங்கள்



அதிக விமானங்கள் தரையிறங்கியிருந்தமையால் விமானநிலையத்தில் சனநெரிசல் சற்று அதிகமாகவே இருந்தது. இது இந்த விமான நிலையத்தின் இயல்பான இயக்கமாக இருந்தபோதிலும், இந்நாட்களில்



சகல நாடுகளிலிருந்தும் விடுமுறையைக் கழிப்பதற்காக, மக்கள் பிரயாணங்களில் ஈடுபடுவது இந்த அபரித சனநெரிசலுக்கு ஒரு காரணமாகவும் இருந்திருக்கலாம். தவிர, ஆசியாவிலேயே மிகக் குறைந்த விலையிலான விமானப்போக்குவரத்தை வழங்கும் நாடாக மலேசியா இருப்பதும் இந்த சனநெரிசலுக்கு மற்றொரு காரணமாகவும் இருக்கக்கூடும்.

விமான நிலையத்தில் சுயமாக இயங்கக்கூடிய கணினிகள் அமைந்திருந்த இடத்தைத் தேடிக் கண்டுபிடித்து, அங்கிருந்த பல கணினித்திரைகளிலொன்றில் கைவிரலைப் பதித்தபோது, கணினி தானாகச் செயற்படத் தொடங்கியது. கேட்கப்பட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கவே, விமான ஆசன ஒதுக்கீட்டுக் குறியீடு உள்வாங்கப்பட்டவுடன், கணினித் திரையோடிணைந்திருந்த வழியே பற்றுச்சீட்டு வெளியே வந்தது.

அங்கிருந்த பல கவுண்டர்களில் ஒன்றில் கடவுச்சீட்டுடன் பற்றுச்சீட்டைக் கையளித்ததும், கடவுச்சீட்டு முத்திரையிடப்பட்டுக் கையில் கிடைத்தது. விமானம் வரச் சற்று தாமதமடையும் என்பதால், அந்த விமானத்திற்காகக் காத்திருக்கும் இடத்தைக் குறிப்பறிந்து ஞாபகத்தில் வைத்திருந்தபடி விமானநிலையத்தில் ஆங்காங்கே இருந்த கடைகளுக்குச்சென்று பொருட்களையும் விலைகளையும் நமது நாட்டோடு ஒப்பிட்டுப் பார்த்தபடி நேரத்தை நகர்த்தினேன்.

(தொடரும்)

# தெரிந்து கொள்வோம்



* இலங்கை மத்திய வங்கி 5,000 ரூபா பெறுமதியான பலவர்ண நாணயக் குற்றியொன்றை டிசம்பர் 2010 இல் வெளியிட்டது. இது மத்திய வங்கியின் 50 ஆவது நாணயக்குற்றி வெளியீடாகும். இது எந்த நிகழ்வை நினைவுகூர வெளியிடப்பட்டது?
  மத்திய வங்கியின் 60 ஆவது ஆண்டு நிறைவை நினைவுகூர வெளியிடப்பட்டது.
* பின்வரும் தலைநகரங்களில் எது துருக்கியின் தலைநகர் ஆகும்.
  I டமஸ்கஸ் II பெய்ரூட்
  III அம்மான் IV அங்காரா
  விடை: அங்காரா



* பின்வருவனவற்றில் கொழும்பு தேர்தல் மாவட்டத்தைச் சேராத தேர்தல் தொகுதி எது?
  I கம்பஹா
  II கொலன்னாவ
  III பொரல்லை IV அவிசாவளை
  விடை: கம்பஹா



* இலங்கையின் உயரமான மலை 'பிதுருதாலகால' மலையாகும். அதன் உயரம் 2,524 மீற்றர்.
  இலங்கையின் மிகவும் நீளமான நதி எது? அதன் நீளம் என்ன?
  மகாவலி கங்கை- 335 கி.மீற்றர்



* இலங்கையின் முதலாவது அரசன் பண்டுகாபயன் ஆவான். இலங்கையின் முதலாவது பெண் அரசி யார்?
  அனுலாதேவி



* முதலாவது பகல், இரவு கிரிக்கெட் போட்டி எப்போது, எந்த நாடுகளுக்கிடையில் நடைபெற்றது?
  1992 இல் உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியின்போது, அவுஸ்திரேலிய- நியூஸிலாந்து நாடுகளுக்கிடையில் நடைபெற்றது.



* போலியோ எனும் இளம்பிள்ளைவாத நோயை முற்றாக ஒழித்த நாடுகளில் இலங்கையும் ஒன்றாகும். போலியோ வக்சீனை (பால்குத்தும்) முறையை கண்டுபிடித்தவர் யார்?
  அல்பர்ட் சேபின்

**தொகுப்பு: உடுவை பரந்தாமன்**

விஜய் Bookvin கிழக்கு பதிப்பகம்

## இணைந்து வழங்கும் கேள்வி-பதில்

# அறிவுத் தேடல்

**"கேள்விகளே அறிவின் திறவுகோல்" என்றார் ஐன்ஸ்டைன்; "ஒரு மனிதனை, அவன் கேட்கும் கேள்விகளால் மதிப்பிடுங்கள்" என்றார் வோல்டேயர்.**

ஆனால், இன்று எம்மில் எத்தனை பேர் கேள்விகளைக் கேட்கத் துணிகின்றோம்? எத்தனை பேர் சிந்திக்கின்றோம்? (பாடப் புத்தகத்தில் இருப்பதைத்தவிர, வேறு எதுவும் தெரியாத 'புத்தகப் புழுக்களாக' மாறி வருகின்றோம்)

இதோ! உங்கள் 'விஜய்'- Bookvin - கிழக்குப் பதிப்பகம் உடன் இணைந்து உங்கள் அறிவுக்கண்ணைத் திறக்க முன்வருகின்றது. விஞ்ஞானம், வரலாறு, புவியியல், மொழியியல், கணிதம், இயற்கை, மனோவியல் மேலும் பல... என்ற ரீதியில் எதில் வேண்டுமானாலும் உங்கள் கேள்விகள் அமையலாம்.

**'கேள்வி கேட்பவன், விடை கிடைக்கும் வரை முட்டாளாக இருக்கின்றான்; கேள்வி கேட்காதவனோ, ஆயுள் முழுவதும் முட்டாளாகவே மரணிக்கின்றான்!'**

ஆகவே, கேளுங்கள்; உங்கள் மூளையைக் குழப்பும் புரியாத புதிர்களுக்கு நாம் விடையளிக்கின்றோம்! உங்களால் உண்மையை மாற்ற முடியாது; ஆனால் உண்மை, உங்களை மாற்றட்டும்!

வாராவாரம், சிறந்த கேள்விகளைக் கேட்கும் இருவருக்கு தலா ரூ.500 மதிப்புடைய நூல்கள் பரிசாக வழங்கப்படும்.

உங்களது கேள்விகளை அனுப்ப வேண்டிய முகவரி:

அறிவுத் தேடல்,
'விஜய்'
த.பெ.இல: 2037, கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தயாரிப்பு - ஸாரா

1, 2, 3, 4, 5 என இலக்கமிடப்பட்டுள்ள பகுதிகளுக்கான விடைகளை தபால் அட்டையில் மாத்திரம் ஒட்டி 2012.10.10 ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வையுங்கள்.

**அற்லஸ் அறிவுக்கு விருந்து 385**
**விஜய் - த.பெ.எண் 2037, கொழும்பு**


## ஆறு வித்தியாசங்களில் X அடையாளமிடுக — 3



## எத்தனை உள்ளன? — 4


How many  are there ? ☐

How many  are there ? ☐




## அறிவுக்கு விருந்து - 382 விடைகள்

போட்டி: 02




போட்டி: 03



போட்டி: 04

1. பெருக்கத்து வேண்டும் பணிதல் சிறிய சுருக்கத்து வேண்டும் உயர்வு.
2. பணியுமாம் என்றும் பெருமை சிறுமை அணியுமாம் தன்னை வியந்து
3. ஒழுக்கமும் வாய்மையும் நாணும்இம் மூன்றும் இழுக்கார் குடிப்பிறந்தார்.
4. உழுவார் உலகத்தார்க்கு ஆணி அஃது ஆற்றாது எழுவாரை எல்லாம் பொறுத்து.

போட்டி: 05

1. வன்மை - மென்மை
2. பாதகம் - சாதகம்
3. உற்சாகம் - சோர்வு
4. குறுகிய - நீண்ட
5. ஆக்கல் - அழித்தல்

பின்வரும் ஒவ்வொரு சொல்லிலும் இரண்டு சொற்கள் மறைந்துள்ளன. அவற்றைக் கண்டுபிடித்து எழுதுங்கள் — 1

1. கதிரை - ..............., ...................
2. மலையடிவாரம் - ..............., ...................
3. பசும்பால் - ..............., ...................
4. நாற்சந்தி - ..............., ...................
5. கானகம் - ..............., ...................

## தடித்த எழுத்திலுள்ள சொற்களை பன்மைக்கு மாற்றி வாக்கியங்களை எழுதுக — 2

1. வெண்புறா சிறகை விரித்துப் பறந்தது.
..............................
2. நான் ஓடி விளையாடினேன்.
..............................
3. மாணவரின் விபரம் நேற்று வெளியிடப்பட்டது.
..............................
4. கப்பல் யுத்தத்திற்கு தயாராகியது.
..............................

## இணைக்க — 5

| | | | |
|---|---|---|---|
| carrot |  | doll |  |
| frog | | fruit | |
| piano | | can | |
| box | | rose | |
| bike |  | black |  |
| pie | | sheep | |
| foot | | spoon | |
| yoyo | | key | |

## அற்லஸ் அறிவுக்கு விருந்து - 382 பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகள்...

போட்டி: 01
ராயிசுல் ஹக், நியூ டவுன், திகன.

போட்டி: 02
அ.சோபிகன், நுணாவில் மேற்கு, சாவகச்சேரி.

போட்டி: 03
எம்.அஃப்ரான், காஸ்மீர் வீதி, உப்புக்குளம்.


போட்டி: 04
ம.மின்ஸர், ஹுதா வீதி, காத்தான்குடி-03.

போட்டி: 05
எம்.ஜனனி, கருங்காளி சோலை, முந்தல்.

**பாராட்டுப் பெறுவோர்:**

- எம். அக்ரம், கல்ஹின்ன.
- வி.நிமேஷ், புதுக்குளம்.
- பஸீலா அஹமட், திக்குவல்லை.
- எஃப்.ரஹீமா, உக்குவளை.
- கே.ஜெரோம், கொச்சிக்கடை.
- உதயகார்த்திக், சுழிபுரம்.
- நஸ்லி பாரூக், அரநாயக்க.
- எம்.ஆர்.சிராபா, ரம்பாவ.
- யோ.லோஜிகா, பரந்தன்.
- அஸ்வின் பிரேம், போபத்தலாவ.

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 01




**மேலிருந்து கீழ்**

01. இது செய்து செயல்பட வேண்டும் என பெரியோர் கூறுவர்.
02. தங்கத்தை இது போட்டுப் பார்ப்பார்கள்.
03. கல்வி கற்கும் இடம்.
05. 'விரைவு' என்றும் சொல்லலாம்.
07. செல்வத்தைக் குறிக்கும்.

**இடமிருந்து வலம்**

01. ஒரு நிறமாகும்.
04. உலோகங்களில் ஒன்று,
06. இந்தப் பிரதேசத்தில்தான் தேயிலை அதிகம் உற்பத்தி ஆகிறது.
07. ஒவ்வொரு நாளும் மாறும்.
09. 'குரங்கு' என்றும் கூறுவர்.
10. கைதிகள் இருக்குமிடம்.

விடைகள் அடுத்த இதழில் வெளிவரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புலமைப்பரிசில் பரீட்சை:

# தமிழ்மொழிமூலம் யாழ்.மாணவன் முதலாமிடம்



2012 ஆம் வருடத்திற்கான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் தமிழ்மொழி மூலப்பரீட்சைக்குத் தோற்றியவர்களில் அகில இலங்கை ரீதியில் யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை மாணவன் பாலேந்திரன் அபிராம் முதலாமிடத்தைப் பெற்றுள்ளார். இவர் பெற்ற புள்ளிகள் 193.

இதேவேளை, தமிழ்மொழி மூலம் தோற்றியவர்களில் மாவட்ட மட்ட அடிப்படையில்,

**கொழும்பு** மாவட்டத்தில் பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி மாணவன் துவாரகேஷ் முதலாமிடத்தைப் பெற்றுள்ளார். இவர் பெற்ற புள்ளிகள் 191. பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியில் 51 மணவர்கள் சித்தி பெற்றுள்ளமையும் 70 வீதமான மாணவர்கள் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

**நுவரெலியா** மாவட்டத்தில் ஹட்டன் ஹைலன்ஸ் கல்லூரி மாணவன் பாலச்சந்தர் பிரசாத் 192 புள்ளிகளுடன் முதலாமிடத்தைப் பெற்றுள்ளார்.

**மட்டக்களப்பு** மாவட்டத்தில் புனித மிக்கேல் கல்லூரி மாணவன் தமிழ் வண்ணன் துவாரகேஷ் 192 புள்ளிகளுடன் முதலாமிடத்தைப் பெற்றுள்ளார்.

**கிளிநொச்சி** மாவட்டத்தில் கிளிநொச்சி மத்திய கல்லூரி மாணவி எஸ்.லக்ஷிகா, திருவாரூர் மகா வித்தியாலய மாணவன் பி.சரலன், கிளிநொச்சி மகா வித்தியாலய மாணவன் 'தேவராசா சபிலஷன்' ஆகியோர் 177 புள்ளி ரீதியில் முதலாமிடத்தைப் பெற்றுள்ளனர்.

**மாவட்ட மட்டத்தில் முதலாமிடத்துடன் சித்திபெற்றுள்ள ஏனைய மாணவர்கள் வருமாறு:**

**மன்னார்:** அலோசியஸ் டயஸ், பேசாலை பாத்திமா முஸ்லிம் வித்தியாலயம் - 186 புள்ளிகள்.

**வவுனியா:** கே.தர்ஷிகா, ரம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம் 192 புள்ளிகள்.

**முல்லைத்தீவு:** ரஞ்சித் சுரபி, விஸ்வமடு மகா வித்தியாலயம் மற்றும் திருனுஷா ஜெயராசா அலம்பில்



பா. அபிராம்

செம்மலை மகா வித்தியாலயம் 183 புள்ளிகள்.

**அம்பாறை:** கனகசபிஷன் வைஷாலி, அக்கரைப்பற்று ஸ்ரீ இராமகிருஷ்ணா கல்லூரி - 187 புள்ளிகள்.

**திருகோணமலை:** ஆர்.காவியா, ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரி - 191 புள்ளிகள்.

இதேவேளை, பொதுவான அடிப்படையில் அகில இலங்கை ரீதியில் காலி ரிச்மண்ட் கல்லூரியைச் சேர்ந்த சகுந்தள கொடிதுவக்கு என்ற மாணவியும், தலாத்துஓய கனிஷ்ட வித்தியாலய மாணவி உபேக்ஷா மதுவதனி ஆகிய இருவரும் 196 புள்ளிகளுடன் முதலாமிடத்தைப் பெற்றுள்ளனர்.

மூன்றாம் இடத்தை கந்தானை ஏழாம்நாள் திருச்சபை மாணவன் விக்ரமசிங்ஹ, 195 புள்ளிகளுடன் பெற்றுள்ளார்.

மேற்படி, புலமைப்பரிசில் பரீட்சையில் 3 லட்சத்து பதினெண்ணாயிரத்து நானூற்றிப் பத்து (3,18,410) பேர் தோற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

குறித்த பரீட்சை பெறுபேறுகள் மீள்பரிசீலனை செய்யப்படமாட்டாது என்றும், யாரேனும் ஒருவரது பெறுபேறு சந்தேகத்திற்குரியதாக இருப்பின், அதிபர் ஊடாகவே, அவர் மீள்பரிசீலனை தொடர்பாக மனுச் செய்தல் வேண்டும் என்றும் பரீட்சைகள் ஆணையாளர் ஜயந்த புஷ்பகுமார தெரிவித்துள்ளதுடன், இத்தகைய மீள்பரிசீலனை மனுக்கள் ஒக்டோபர் 15 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கப்படவேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஜய் சாரணர் உலகம்

## ஆசிரியர் கருத்து

தமிழ் பத்திரிகைத்துறையில் சாரணர்களுக்கென சிறப்புப் பக்கமொன்றை ஒதுக்குவது இதுவே முதற் தடவையாகும். மாணவ சமூகத்தில் சாரணக்குழுவுக்கும் ஒரு முக்கிய இடம் உள்ளது.

அதன் வெளிப்பாடே இந்த தனிப்பக்கமாகும். மாணவப் பருவத்தில் ஆரம்பமாகின்ற சாரணர் சேவையானது, பாடசாலையை விட்டுச் சென்ற பின்னரும் தொடர்வதுண்டு. இதனால்தான் இன்று வயதில் மூத்தோர் தொடக்கம் இளையோர் வரை ஆயிரக்கணக்கானோர் இந்த சாரணர் சேவையில் ஈடுபாடு காட்டி வருகின்றனர். இவர்களது சேவை கருதியே 'விஜய்' பத்திரிகையில் இந்தப் பக்கம் வழங்கப்படுகின்றது.

சாரணியம் தொடர்பான சகல விதமான விடயங்களும் இதில் வழங்கப்படும். ஏனைய சாரணர்களுக்கும் இதனை அறிமுகப்படுத்துங்கள்.

(ஆசிரியர்)

## சாரணர் இயக்கம்

நவீன உலகின் சிறுவர் மற்றும் இளைஞர்களுக்கான மாபெரும் இயக்கமே சாரணர் இயக்கமாகும். இதுவரையில் உலகின் அனைத்துக் கண்டங்களிலும் 161 நாடுகளில் 36 மில்லியன் சாரணர்கள் அங்கம் வகிக்கின்றனர். இன, மத, மொழி பேதம் கடந்த சாரணர் இயக்கத்தின் பிரதான நோக்கம் எதிர்காலத்துக்காக சிறந்த குடிமக்களை உருவாக்குவதாகும். சிறந்த ஆளுமை மிக்க குடிமகனாக, எதிர்கால சமுதாயத்தில் வினைத்திறனுடன் வாழ்வதற்கு வழிவகுக்கும் சிறந்த இயக்கம் சாரணியமாகும்.

உலக சாரணியர் இலச்சினை

இலங்கை சாரணியர் இலச்சினை




| | | |
|---|---|---|
| S | Satisfactory | திருப்தி |
| C | Character | குணாதிசயம் |
| O | Obedient | மரியாதை |
| U | Understanding | புரிந்துணர்வு |
| T | Trustworthy | நம்பிக்கை |




சாரணன் எப்பொழுதும் 'தயாராக இருப்பான்' அவன் சிறந்த உலகத்தை உருவாக்கு வதற்காக உழைக்கின்றான்.

## சாரணர் இயக்கத்தின் தந்தை



லண்டன் நகரில் பிறந்த பிரபு பேடன் பவல் நாட்டு மக்கள் மீது கொண்ட அன்புணர்வால் சாரணிய உலகத்தை உருவாக்கினார்.

1857 ஆம் ஆண்டு பெப்ரவரி 22 ஆம் திகதி லண்டன் மாநகரில் பிறந்த பிரபு பேடன் பவல் அவர்கள், தமது வாழ்வில் பெற்ற அனுபவங்களைக்கொண்டு சிறந்த உலகை உருவாக்கும்முகமாக, உலகிற்கு சாரணர் இயக்கத்தை உருவாக்கி வைத்தார்.



எப்பொழுதும் மற்றவர்களுக்கு உதவி செய்வது சாரணனின் சுபாவமாகும். பிரச்சினைகளில் இருப்போருக்கு அவன் எப்போதும் கரம் கொடுப்பான்.



## சாரணர் பாடல்

கின் கங் குழி குழி
குழி வொச்சா கின் கங்
கோ கின் கங் கோ//

ஏலா ஏலா சேலா
ஏலா ஏலா சேலா
ஏலா ஓ//

சலவழ சலவழ
சலவழ சலவழ
கும்பக் கும்பக் கும்பக் கும்பக்

## இலங்கை சாரணர் இயக்கத்தின் ஸ்தாபகர்



பிரபு பேடன் பவலின் மிக நெருங்கிய நண்பரும், பொது வேலைத் திணைக்களத்தில் பணியாற்றியவருமான பிரித்தானிய பொறியியலாளரான றொபர்ட் ஸ்டீவின்சன் 1912 ஆம் ஆண்டில் இலங்கையில் சாரணிய இயக்கத்தை அறிமுகம் செய்துவைத்தார்.



சாரணனுக்கும் சூழலுக்கும் இடையில் பாரிய பிணைப்புக் காணப்படுகின்றது. இயற்கை இன்றி சாரணர்களால் இயங்க முடியாது. எனவே, சாரணர்கள் இயற்கையோடு ஒன்றிச் செயற்படுவார்கள்.



சாரணர்களின் உலகம் மகிழ்வும், களிப்பும் மிகுந்த அழகிய உலகமாகும்.

## இலங்கையும் சாரணிய இயக்கமும்



சாரணர் இயக்கம் இலங்கை முழுவதும் பரந்துள்ளது. அனைத்து மாகாணங்களையும் உள்ளடக்கி 33 சாரணிய மாவட்டங்கள் உள்ளன. இலங்கை சாரணர் சங்கத்தில் சாரணர், சாரணியர்கள் 47,000 பேருக்கும் அதிகமானோர் அங்கம் வகிக்கின்றனர்.

இலங்கை தேசிய சாரணர் சங்கத்தின் பிரதான ஆணையாளராக பேராசிரியர் நிமல் டி சில்வா பதவி வகிக்கின்றார்.

தயாரிப்பு: சாரணர் ஜெரம் டி சில்வா
உதவி: நீதிராஜா வர்ணன்

இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2012, ஒக்டோபர் மாதம் 03 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday October 03, 2012.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org